

# மாத்வமித்திரன்.

4 AUG
DIGITIZED

# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar
KUMBAKONAM.





பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| Vol 5 | ஆங்கீரஸ ஸம்வத்ஸரம் | No 1 |
|---|---|---|
| | சிராவண மாஸம் | |
| புஸ்தகம் 5 | பௌர்ணமி (16—8—32.) | நெ 1 |

நெ. பொருளடக்கம். பக்கம்.

1, ஸ்ரீ தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்.) 1
2. ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகளின் சரித்திரம். 9
3. ஓர் கண்டனம். 13
4. ஸ்ரீமத்வமத கிரந்தங்கள். 15
5. மணிமஞ்ஜரி. (ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார். 17
6. மாத்வமித்திரன் வால். 3,4-ன் அட்டவணை. 21,23
7. ப்ரமாணசந்திரிகை (ஸ்ரீமான் எம். ராமராவ்) 25
8. விக்ஞாபனம். 27
9. செய்தித்திரட்டு. 28
10. சங்கர லீலா விலாஸம் (ஸ்ரீமான் H. சுப்புராவ்.) 29
... பகவத்கீதை த்வைதபரம்தான். 30
... தினங்கள். 32

ஆசிரியர்
பாகவத ரங்கநாதாசாரியார்.

N32.5.1
208696

**RAGHU VILA[illegible] MADURA[illegible]**

[illegible]fully equipped Hotel famous for its cleanlin[illegible] superiority and palatial surroundings noted for i[illegible] up-to-date Varieties with first-rate preparations.

**R. Bindumathava Rao,**
*Proprietor.*

ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்,
20 டவுன்ஹால் ரோடு, மதுரை.

R. ரகூத்தமராவ் மானேஜர்

ஸ்ரீஉத்தராதிமடம் ஸமஸ்தாஞ்திபதி ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்வாமிகள் அருளிச்செய்த

**ஸ்ரீகீதாதத்வம் (முதற்பாகம்.)**

கும்பகோணம் மாத்வமித்திரன் பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியாரால் எளிய தமிழ்நடையில் எழுதப்பட்டது. ஸ்ரீவிஷ்ணு ஸர்வோத்தமத்வம், ஜகத் ஸத்யத்வம், ஜீவப்ரம்ம அபேதம் ஜீவர்களின் பாரதந்திரியம் தாரதம்மியங்கள், முக்தி ஸ்வரூபம், ஆகிய இந்த ஐந்து மத்வமத ப்ரமேயங்களைப்பற்றியும் இவைகளுக்கு இதர மதத்தார்களால் முக்யமாய் அத்வைதிகளால் செய்யப்படும் பலவகை ஆக்ஷேபணைகளுக்கு தக்க சமாதானங்களையும் பலவகை திருஷ்டாந்த பூர்வமாய் ஸ்ரீ பகவத்கீதை வசனங்களைக்கொண்டு அவைகளின் சரியான துவைதபரமான அர்த்தபிசாரத்துடன் கூறப்பட்டிருக்கின்றன. தேவநாகரத்திலும் தமிழிலும் சுலோகங்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன, உயர்ந்த காகிதத்தில் அச்சாகிவரும் இந்த புஸ்தகம் தற்போது பணம் செலுத்துகிறவர்களுக்குமட்டில் விலை ரூ. 1—8—0. மேற்கண்ட முதல் மூன்று ப்ரமேயங்களடங்கிய 3 சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் வெளியாகி அதன் சந்தாதாரர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. தனி சஞ்சிகை கிரயத்திற்கு கொடுக்கப்படமாட்டாது. தற்போது ஆர்டர் செய்கிறவர்கட்கு ரூ. 1–14–0க்கு வி.பி.பி. செய்யப்படும், இதர சஞ்சிகைகள் அவைகள் வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். ஒவ்வொருமாத்வரும் அவசியம் படித்துணரவேண்டிய இப்புத்தகத்திற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

மானேஜர் மாத்வமித்திரன், வியாஸவிலாசம்,
கும்பகோணம்

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

14 AUG 1932

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)
(காபி ரைட்) (முன் தொடர்ச்சி.)

### பதினொன்காவது அத்யாயம்.

அந்த ஸமயத்திலேயே பாண்டுராஜன் மாத்ரீ தேவியுடன் கூடி சஞ்சாரம் செய்துகொண்டு புருஷகோகிலங்களால் வியாப்தமானதும் புஷ்பித்திருந்ததுமான வனத்தைக்கண்டார். அவர் அந்த வனத்தில் வஸந்தகாலத்தின் மந்தமாருதம்வீச மனோவிகாரமடைந்து அவருக்கு ஏற்பட்டிருந்த கிந்தமரிஷியின் சாபத்தை மறந்து மன்மத பாணங்களுக்கு வசனானார். பிறகு மாத்ரியைப் பிடித்துக்கொண்டார். அவளுடன் க்ரீடித்திரிக்கும்பொழுது பகவானுடைய சரண பக்தனான பாண்டுராஜன் யமனுடைய ஸ்தானம் போய்ச் சேர்ந்தார். இந்த பாண்டுராஜன் முன்பு பராவஹன் என்ற மருத்தாய் இருக்கும்பொழுது, சசிதேவியுடன் க்ரீடிக்க அபேக்ஷையுடனிருந்த இந்திரனை அச்சமயம் காணப்போய் சசீயின் ஸங்கமம் தடைபடும்படி செய்தார். அந்த ப்ரபலமான காரணத்தால்தான் அந்த பராவஹ மருத்து மனுஷ்ய ஜன்மமடைந்து ரமணம் செய்யும்பொழுது மரணத்தை அடைந்தார். மேலும் ஔரஸர்களான பிள்ளைகளில்லாதவராய் ஆனார். அவரைவிட உத்தமர்களான தேவர்களிடம் சிறிது அபராதம்

208698



செய்தாலும் அந்த அபராதம் விசேஷமான அநர்த்தமாயுள்ள பலனைத்தருகிறது. பாண்டுராஜன் மாண்டுபோனதைப்பார்த்து இங்கு மாத்ரீதேவி ரோதனம் செய்தாள். குந்திதேவியுடன் ஐந்து பாண்டவர்கள் அந்த ரோதனத்தை தூரத்திலிருந்து கேட்டனர். அந்த ஐந்து குமாரர்களும் பாண்டுராஜனின் ப்ரேதத்தின் சமீபம் போகப்போக அவர்களெல்லோரையும் நீங்கள் இங்கு வராதீர்களென்று மாத்ரீ தேவியின் வாக்யத்தால் தடுத்து குந்திதேவிமட்டில் ப்ரேதத்தின் சமீபம் போய்ச்சேர்ந்தாள். குந்திதேவி தன் புருஷனின் ப்ரேதத்தைப்பார்த்து மாத்ரீதேவியின் முகத்தினின்றும் புருஷன் இறந்த காரணத்தைக்கேட்டு ஸங்கடமடைந்த ஹிருதய கமலமுள்ளவளாய் மாத்ரீதேவியை நிந்தை செய்து பர்த்தாவுடன் உடன்கட்டை ஏற எண்ணிக்கொண்டாள். குந்திதேவியின் அழுகைக்குரலை பாண்டவர்கள் கேட்டனர். பாண்டவர்கள் பாண்டுவின் சவத்தின் சமீபம் வந்து சேர்ந்தபிறகு அழுகை சப்தம் அதிகமாயிற்று. அந்த சதசிருங்க பர்வதத்திலுள்ள எல்லா ரிஷிசிரேஷ்டர்களும் இந்த அழுகை சப்தத்தைக் கேட்டனர். ரிஷிஜனங்களில் உத்தமமான கருணையுள்ளவர்கள் பிறகு அங்கு வந்து கூடினர். குந்திதேவி மாத்ரீதேவி இவர்கள் பாண்டுராஜனோடு பிராணனைவிட நான் ஸஹகமனம் செய்வேன் நான் ஸஹகமனம் செய்வேன் என்று போட்டிப்போட்டுக்கொண்டனர். பிறகு ரிஷிகள் குந்தியை ஸஹகமனம் செய்யாதே என்று தடுத்து, பதியுடன் ஸஹகமனத்தை அபேக்ஷித்திருந்த மாத்ரிதேவிக்கு மட்டில் அவளுடைய தோஷத்தை அறிந்து, எப்போதுமறியப்பட்டதாயுள்ள பகவத்ப்ரீதிகரமான உத்கிருஷ்ட தர்மமுள்ள அந்த ரிஷிகள், ஸஹகமனம் செய்ய அனுமதித்தனர். மாத்ரீதேவி செய்த தோஷம் யாதெனில் மாத்ரி அவளுடைய புருஷனை பாண்டுராஜனைவிட குணத்தில் மேலானவராயில்லாதவர்களான அசுவினீ தேவர்களை, தன் புருஷனைவிட மேலானவர்கள் தேவோத்தமர்கள் என்ற எண்ணத்தால் தனக்கு மகன் பிறக்க ஸ்வீகரித்தாள். பதியைவிட உத்தமனில்லாததான புருஷனை ஸ்வீகரித்த தோஷத்தாலேயே மாத்ரிதேவி நற்குணம் படைத்தவளாயினும் புருஷனுடைய மரணத்



திற்குக் காரணமானாள். எல்லா ஜனங்களாலும் அத்யந்தம் பூஜிக்கப்பட்டவளாய் ஆகவில்லை. ஐந்து பாண்டவர்களும் சேர்ந்து வேதவியாஸரின் ஆசிரமத்தில் ரிஷிக்கூட்டங்களுடன்கூடி பாண்டுராஜனுக்கு தகனம் முதலான பித்ருயக்ஞத்தை விதானப்படி செய்தனர். பிறகு பாண்டுராஜனுடைய சரீரத்துடனே சேர்த்து மாத்ரிதேவி தன்னுடைய சரீரத்தை அக்னியில் ஹோமம் செய்து இந்த ஜன்மத்தில் செய்த மேற்கண்ட உத்கிருஷ்ட பாபத்தை நிவிருத்தி செய்துகொண்டு தன்னுடைய பதியின் லோகத்தையே அடைந்தாள். ஸ்ரீவேதவியாஸரின் ஔரஸமகனும் ஸ்ரீகிருஷ்ணனுடைய பாதத்தில் எப்போதும் முக்ய பக்தனுமான பாண்டுராஜன் மகான்களால் சிலாகிக்கப்பட்டதும் நிர்தோஷமானதுமான லோகங்களை அவருடைய * பிள்ளைகளின் குணங்களாலும் அவருடைய குணங்களாலும் அடைந்தார். பகவானுடைய பாதங்களில் விசேஷமாய் வணங்கிய மனங்கொண்ட பாண்டுராஜனுக்கு நல்ல லோகம் கிடைப்பது என்ன ஆச்சரியம். ஐந்து பாண்டவர்கள் குந்தியுடன் சேர்ந்து ரிஷிசிரேஷ்டர்களின் மூலமாய் பதரிகாசிரமத்தினின்றும் ஹஸ்தினநகரம் வந்தனர். அந்த ரிஷி சிரேஷ்டர்கள் திருதராஷ்டிரனின் எதிரில் பாண்டுராஜனுக்கு சாபம் வந்ததையும் ஐந்து மக்கள் பிறந்ததையும் இவை முதலான எல்லா விருத்தாந்தங்களையும் அவருடைய தம்பியான பாண்டுராஜன் மரணமடைந்ததையும் சொன்னார்கள். திருதராஷ்டிரராஜனும் கங்காதேவியின் குமாரரான பீஷ்மாசாரியாரும் அதற்கு ஒன்றும் பேசாமலிருக்க, விதுரன் பாண்டவர்களைப்பார்த்துவிட்டு விசேஷமான சந்தோஷத்தை அடைய, அதிபாபிஷ்டர்களான துரியோதனாதிகள்; "பாண்டுராஜன் முன்பே இறந்துவிட்டானே! அவனுக்கு பிள்ளைகள் ஏது என்று சொன்னார்கள். பாண்டுராஜன் இறந்த பின்பு அவனுடைய சொந்த பந்து ஜனங்களிடமிருந்து அனுமதியைப் பெறுமல் பாண்டுராஜனின் பத்னியிடம் அன்ய புருஷரால் பிறந்த பிள்ளைகள் வம்சவிருத்திக்கு தகுதியுள்ளவர்களன்று; ஆகையால் இந்த ஐவரும் பாண்டுராஜனுக்கு ஔரஸபிள்ளைகளுமன்று க்ஷேத்திரஜபிள்ளைகளுமன்று;" என்றிவ்வாறு துரியோதனாதிகள்

பேச உத்தரக்ஷணமே வாயுபகவான் ஆகாயத்தில் மறைந்திருந்து, ஹே துரியோதனாதிகளே! என்று அழைத்துப்பேசினர். உத்கிருஷ்டமான பகவத்தர்மத்தால் சிரேஷ்டர்களான இந்த ஐந்து மக்கள் பாண்டுராஜன் பிழைத்திருக்கையில் அவனுடைய அனுமதியின்பேரில் யமபகவான், வாயுபகவான், இந்திரபகவான், அசுவினீ தேவர்கள் இவர்களால் பிறந்திருக்கின்றனர்; ஸ்ரீவேதவியாஸரால் எப்போதும் ஸம்ரக்ஷிக்கப்பட்டவர்களாதலால் நீங்கள் இவர்களை ஏற்றுக்கொள்ளாமலிருக்கமுடியாது; என்றிவ்வாறு வாயுபகவான் மறைவாய் இருந்துகொண்டு சொல்ல இது உண்மையாவென்று துரியோதனாதிகள் சந்தேகிக்கும்பொழுது, கமலநாபனும் உத்கிருஷ்டமான ஸர்வகுண சரீரியாயுள்ள வேதவியாஸரூபியான பகவான் அங்கு ஆவிர்ப்பவித்தார். பாண்டவர்களைக் கைபிடித்து அழைத்துக்கொண்டு பாண்டுராஜனுடைய வீட்டிற்குள் ப்ரவேசம் செய்வித்தார். பாண்டவர்களை வேதவியாஸர் தம்முடைய பிள்ளைகள் என்று ஒப்புக்கொண்டபின் திருதராஷ்டிரருடன் கூடிய பீஷ்மாசாரியார் முதலான எல்லா கௌரவர்கள் குந்தியுடன் சேர்ந்து பாண்டவர்களை மரியாதை செய்து ஏற்றுக்கொண்டனர். அப்பொழுது துரியோதனாதிகள் சகுனியுடன் சங்கடப்பட்டனர்.

## பீமசேனரை துவேஷித்தல்.

த்ருதராஷ்டிரனின் குமாரர்களான துரியோதனாதிகளும் எல்லா ராஜகுமாரர்களும் பாண்டவர்களுடன் சேர்ந்து கிருபாசாரியாரிடமிருந்து மகத்தான அஸ்த்ரங்களை கற்றுக்கொண்டனர். இந்த எல்லா பையன்களும் பலவகையாய் பால சேஷ்டைகளை செய்துவரும்பொழுது இவர்கள் வாயுகுமாரனான பீமசேனரால் பராஜயமடைந்தனர். பழுத்த உத்தமமானதாயுள்ள சாப்பிட அருகமான பழங்களைக் கொண்டுவர பல விருக்ஷங்களில் ஏறிய ராஜகுமாரர்களைக் கண்டுவிட்டு, பீமசேனர் அந்த பெரியதான விருக்ஷங்களின் அடியில் காலால் உதைக்கவும், அம்மரங்களினின்றும் பழங்களுடன் அந்த ராஜகுமாரர்கள் கீழே உதிரவும் அந்த பழங்களை அவர் புஜித்தார். கையில் கம்பெடுத்து யுத்தம் செய்வதிலும் முஷ்டியுத்தத்திலும் ஓடுவதிலும் பரபரப்



பிலும் ஜலத்தில் நீந்துவதிலும் உத்தமர்களால் பூஜிக்கக்கூடிய காரியங்களுள்ள பீமசேனர் எப்பவுமிருப்பதான பகவானுடைய பூர்ணானுக்ரஹத்தால் அவர் ஒருவராகவே இருந்து அங்கு கூடிய எல்லா பையன்களை வேகமாய் ஜயித்தார். பரிபூர்ணமான பௌருஷமுள்ள பீமசேனர் துரியோதனாதிகளை தூக்கிக்கொண்டு போய் ஜலத்தின்நடுவில் மூழ்கவைத்தார். களைத்துப்போன இந்த குமாரர்களை கங்கையில் கைவிட்டுவிட்டு சிரித்தார். ஒரு சமயம் எல்லாகுமாரர்களையும் தூக்கிக்கொண்டு பூர்ண ப்ரவாஹமுள்ள கங்காநதியை அவர்களைக்கடக்கச்செய்தார். ஸ்ரீஹரியிடமும் முக்யப்ராணரிடமும் த்வேஷம் செய்யாமற்போனால் தமஸ்ஸில் ப்ரவேசம் ஏற்படாதாதலால் பூமியில் ஒரேகாலத்தில் அவதாரம் செய்தவர்களும் அவிச்சன்னமானதும் ஸ்வாபாவிதமானதுமான பலத்துடனுள்ள ஸ்ரீகிருஷ்ணர் பீமசேனர் இவர்கள் தேவர்களின் த்வேஷிகளான தைத்யர்களுக்கு த்வேஷகாரணமான காரியத்தைச் செய்தனர். பிறகு எல்லா ராஜகுமாரர்களும் பீமசேனர் நித்யம் செய்யும் எண்ணிறைந்த காரியங்களைக்கண்டு எப்போதும் அவரிடம் துவேஷத்தை விருத்தி செய்துகொண்டனர். பிறகு பின்வருமாறு ஆலோசித்தனர். தேவாம்சர்களான எல்லா ராஜகுமாரர்களும் வாயு புத்ரரான பீமசேனரிடம் உத்தமமான ப்ரீதியைச்செய்தனர். அவர்களைத் தவிர்த்துள்ள ராஜவம்சத்தில் பிறந்த அஸுரர்கள் ஆலோசனை செய்து பீமசேனரைக்கொல்ல நிச்சயம் செய்தனர். எப்படியெனில் இந்த பீமசேனரைக்கொன்றால் மற்ற நான்கு பாண்டவர்களும் அநேகமாய் இறந்தபிராயமாய் ஆவார்கள். பலபூர்ணனான பீமசேனன் பலத்தால் கொல்லப்படமுடியாதவனாதலால் இந்த பீமசேனனை மாத்திரம் ஔஷதம் முதலான கபடமான ப்ரயோகத்தாலும், ஸாமர்த்தியத்தால் அர்ஜுனனையும் கொன்று மற்ற மூவர்களையும் விலங்கிடுவோம். இவ்வாறு செய்தால்தான் துரியோதனனுக்கு சத்ருவில்லாத ராஜ்யம் கிடைக்கும். இல்லாவிடில் கிடைக்காது. இந்த பீமசேனரைக்கொன்று அர்ஜுனனை கீழே சாய்த்தால் தர்மராஜன் நகுலன் ஸஹதேவன் இவர்கள் காந்தாரி மக்களான துரியோதனாதிகளுக்கு தாஸர்களாவார்

கள். இவ்வாறு ஆலோசித்து க்ஷீரசமுத்திரம் மதனம் செய்யும் பொழுது உண்டானதும், ம்ருத்யுக்கு ஸமமானதும், சுக்ராசாரியார் தபஸ் செய்து பரமசிவனிடமிருந்து அவரால் அடையப் பெற்றதும், அவரை ஸந்தோஷப்படுத்தி அவரிடமிருந்து சகுனியால் கொண்டுவரப்பட்டதுமான க்ரூரமான விஷத்தை, பீமசேனருக்கு அந்த ராஜகுமாரர்கள் தந்தனர். ராஜகுமாரர்களுடன் ஆலோசித்து துரியோதனாதிகள், அவர்களின் சமையல்காரர்களின் மூலமாய் எல்லா பக்ஷ்யபோஜ்யங்களில் விஷத்தைக் கலக்கச்செய்திருக்கின்றனரென்ற சமாசாரத்தை, பீமசேனர் யுயுத்ஸுவின் வாயால் அறிந்துகொண்டு, பலிஷ்டரான பீமசேனர் அதை லக்ஷ்யம் செய்யாமல் அந்த விஷம் கலந்த பக்ஷ்யத்தை போஜனம் செய்து விஷ்ணுவின் அனுக்ரஹ பலத்தால் அதை ஜீர்ணப்படுத்திக்கொண்டார். விஷத்தை பீமசேனர் ஜீர்ணத்துக்கு கொண்டுவந்ததும் குச்சிதமான புத்தியைக்கொண்ட துரியோதனாதிகள் மிகவும் சங்கடப்பட்டு பீமசேனரைக் கொல்வதற்காகவென்று கங்கையின் ஜலத்தில் ஓர் மாளிகை கட்டிடத்தை நிர்மாணம் செய்தனர். அந்த சமாசாரத்தை பீமசேனர் யுயுத்ஸுவின் வாயால் அறிந்தும் துரியோதனாதிகளிடம் தோஷத்தை வெளிக்காட்டுவதற்காகவே துரியோதனாதிகளுடன் சேர்ந்து தானாகவே அம்மாளிகையின் ஓரத்தில் படுத்துக்கொண்டார். மனுஷ்ய சிரேஷ்டனான பீமசேனர் தூங்கிப்போனபின் துரியோதனாதிகள் அவரை மந்த்ர ஜபத்தால் திருடமான இரும்புக்கம்பிகளால் கட்டி கங்கையின் ஜலத்தில் தள்ளினர். ஓரத்தில் ஓர் யோஜனை தூரம் ஆழமாயுள்ள அந்த கங்கையின் ஜலத்தை பீமசேனர் ப்ரவேசித்து, கொட்டாவிவிடுவதாலேயே அந்த இரும்பு பாசங்களை சேதனம் செய்து, அநந்த குணமுள்ள பரமாத்மாவிடம் எப்போதும் அத்யந்தம் பக்தியுள்ள பீமசேனர் கங்கையில் நீந்தி மீண்டும் கரைக்குவந்து ஸாதுக்களின் ஸமூகத்திற்கு சந்தோஷத்தை அளித்தார். பிழைத்துத்திரும்பிய பீமசேனரைப் பார்த்துவிட்டு துஷ்டபுத்தியுள்ள துரியோதனாதிகள் மிகுந்த துக்கத்தால் புனராலோசனை செய்து உத்க்ருஷ்டமான ஸர்ப்பவம்சத்தில் பிறந்த எட்டு ஸர்ப்பங்களை தன் நகரத்திற்கு வரவ



ழைத்து அவைகளை கூண்டில் அடைத்துவைத்து அவைகளை துரியோதனின் ஸாரதியின் வசத்தில் கொடுத்தனர். வீரியமுள்ள மந்த்ர சக்தியால் துரியோதனன் வரவழைத்த அந்த எட்டு ஸர்ப்பங்களை படுத்திருந்த பீமசேனனின் விசாலமான மார்பில் துரியோதனனின் ஸாரதி கடிக்கவிட்டான். ஸர்ப்பங்கள் பீமசேனரைக்கடித்து சீக்கிரமே பற்களை போக்கிக்கொண்டன. உடனே பீமசேனர் படுக்கைவிட்டு எழுந்திருக்காமலேயே அந்த எட்டு மகாஸர்ப்பங்களை தூரத்தில் உதரித்தள்ளி அந்த வம்சத்தில் பிறந்த ஸர்ப்பங்களை, எறும்புகளைப்போல் நசுக்கிக்கொன்று புறங்கையைப்போடுவதாலேயே அந்த துரியோதனின் ஸாரதியை ஸம்ஹாரம் செய்தார். பிறகு முன்போலவே பீமசேனர் தூங்கிவிட்டார். எல்லா ராஜகுமாரர்களும் பீமசேனருடைய இணையற்றதான இயற்கை பலத்தைக் கண்டுவிட்டு மிகவும் சங்கடப்பட்டனர். அப்பொழுது இவ்வாறு ஆலோசித்தனர். 'இந்த ஸர்ப்பங்கள் மூச்சுவிட்டாலும், கண்ணால் பார்த்தாலுமே உலகமெல்லாம் பஸ்மமாகுமே, அப்பேர்ப்பட்டவர்கள் இந்த பீமசேனரின் விஷயத்தில் எந்த காரியத்தையும் செய்ய இயலவில்லை, ஸர்பசிரேஷ்டர்கள் அதிப்ரயத்தனத்துடன் பற்களால் கடித்து பீமசேனருக்கு மூர்ச்சாதி விகாரங்களை உண்டாக்க முடியவில்லை; இந்த பீமசேனரின் பலத்திற்கு ஸமமானதாயுள்ள பலம் முன்பு யாருக்குமிருந்ததாய் நான் கேட்டதில்லை. அப்படியிருக்க அதை நேரில் காண ஸந்தர்பம் ஏது? ஹிரண்யகசிபுவின் மகனான ப்ரஹ்லாதனிடமும் இப்பேர்ப்பட்ட பலத்தை நாம் கேட்டதில்லை- தைத்ய குமாரனான ப்ரஹ்லாதன் தன்னை ஸம்ரக்ஷித்துக்கொள்ள ஹரியை அதிகமாய் ஸ்தோத்திரம் செய்து விஷ்ணுவால் ஸம்ரக்ஷிக்கப்பட்டான். அந்த ப்ரஹ்லாதனை அவனுடைய தந்தையான ஹிரண்யகசிபுவின் வேலையாட்களான தைத்யர்கள் பலத்தால் இழுத்துக்கொண்டிருந்தனர். ஆகையால் ப்ரஹ்லாதனுக்கு ஸ்வாபாவிகமான பலமில்லை. இந்த பீமசேனரின் சாமர்த்தியமோ இயற்கையாயுள்ளது. இந்த பீமசேனன் விஷ்ணுவுக்கு ஸ்வாபாவிகமாகவே ப்ரியனென்று பிரம்மக்ஞானிகள் கூறுகின்றனர். இந்த வாக்யம் நிச்சயமாய் ஸத்யமே. இப்பேர்ப்

பட்ட பகவத்ப்ரீதி இல்லாமலிருந்தால் பீமசேனருக்கு இப்பேர்ப்பட்ட இயற்கையானதான பலமிருக்காது—ஆகையால் ஸ்ரீகிருஷ்ணருடன் சேர்த்து பீமசேனரை நாம் கொல்லவேண்டும். இதுதான் புருஷார்த்தம். பகவான் ஸ்ரீஹரி யாதவர்களில் கிருஷ்ணரென பிறந்திருக்கிறார். அந்த கிருஷ்ணன் பீமசேனருக்கு ஆசிரயம். அந்த கிருஷ்ணனுக்கு பஹுத்வேஷமான காரியத்தைச் செய்யுங்கள். என்றிவ்வாறு அதிபாபிஷ்டர்களான ராஜகுமாரர்கள் ஆலோசித்து பிறகு கிருஷ்ணனுக்கு பஹுவிரோதத்தைச்செய்தனர். தைத்யர்களாயுள்ள பிள்ளைகளால் பிரேரிபிக்கப்பட்ட அவர்களின் தந்தைகளான அரசர்கள் ஜராஸந்தனுடன்கூடி யுத்தம் செய்ய ஸ்ரீகிருஷ்ணரின் சமீபம் வந்து சேர்ந்தனர். ஸ்ரீகிருஷ்ணரால் பதினெட்டுதடவை யுத்தத்திலும் அவர்கள் அவர்களின் பலம் அகங்காரம் மதம் இவைகள் நாசமடைந்து திரும்பிச் சென்றனர். ஸ்ரீகிருஷ்ணரால் யானைகள் குதிரைகள், ரதங்கள் இவைகள் கைப்பற்றப்பட்டு ஆயுதங்களால் வெட்டுப்பட்ட அவயவங்களினின்றும் விசேஷமாய் ரக்தத்தைப் பெருகவிட்டுக்கொண்டு, ஆயுதம், த்வஜம், கவசம், குதிரைகள் ஸாரதி இவைகளிழந்தவர்களாய், வஸ்திரங்கள் நழுவியவர்களாய், கேசபாசம் அவிழ்ந்தவர்களாய் இந்த அரசர்கள் திரும்பினர். இவ்வாறே ஜராஸந்தன் துக்கப்படத்தக்க ரூபமுள்ளவனாய் பூர்ணமான பலம் வீரியம் குணம் இவைகளுடனுள்ள ஸ்ரீகிருஷ்ணரால் பலதடவை ஹிம்சிக்கப்பட்டவனாய் அத்யந்தம் பராஜயமடைந்தவனாய், சுவாசம் மட்டில் மீதியுள்ளவனாய், பிழைத்துப்போ என்று ஸ்ரீகிருஷ்ணரால் விடுபட்டவனாய், பதினெட்டுதடவை அவனுடைய நகரத்திற்கு ஓடிப்போனான். இப்படியே தலையை தொங்கபோட்டுக்கொண்டு இந்த அரசர்கள் அநேகதடவை ஓடியபின் ரமாபதியும் எண்ணமுடியாத பலமுள்ளவனும் ஜயஸம்பத்துள்ளவனுமான ஸ்ரீகிருஷ்ணர் மதுராநகர ப்ரவேசம் செய்து க்ரீடித்தார்.

## பீமசேனனின் திக்விஜயம்.

துரியோதனாதிகளுடன் சேர்ந்த ராஜகுமாரர்கள் அவர்களின் எத்தனங்கள் வீணாய்ப்போக அவர்கள் விவேகமில்லாதவர்களானதால் திரும்பியும் பீமசேனரைக்கொல்ல விசேஷமான ப்ரயத்தனம் செய்தனர். பலிஷ்டரான பீமசேனர் அந்த எல்லா ப்ரயத்தனங்களையும் பாழாக்கி திக்விஜயம் செய்ய எத்தனித்தார். (தொடரும்.)

## ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

---

(2) மந்த்ரமோ, த்யானமோ, க்ஞானமோ, கானமோ, பக்தியோ, யோகமோ, எல்லா கர்மாக்களுமே, குரு உபதேசமில்லாவிடில் மலைப்பாம்பின் உபவாசம்போல் புண்யபலனைத்தரமாட்டாதென்பதை அறியுங்கள். சற்குருவான ஸ்ரீவியாஸராஜர் என்னிடம் கருணைகூர்ந்து உத்தமமான மகாமந்திரங்களை உபதேசித்து புரந்தரவிட்டலனான ஸ்ரீஹரிதான் ஸர்வோத்தமனென்று உபதேசித்து ஞானமார்க்கத்தைக் காட்டினார். அதனால் நான் என் பாபங்களையெல்லாம் தொலைத்துக் கொண்டேன் என்றார். ஸ்ரீபுரந்தரதாஸர்மட்டில் இவ்வாறு மகாஸ்தோத்திரம் செய்திருக்கிறாரென்றில்லை. தாஸவர்க்கத்தில் முக்யஸ்தரான ஸ்ரீ கனகதாஸரும் ஸ்ரீவியாஸராஜருக்கு பரமதாஸனாய் இருந்துவந்திருக்கிறார்.

ஆட்டிடையன் குலத்தில் பிறந்திருந்தவரும் பரமபக்திமானாய் அபரோக்ஷ ஞானியுமான கனகதாஸரை உடுபி ஸ்ரீகிருஷ்ணன் கோயிலில் போகலாகாதென்று அங்குள்ளோர் தடுத்துவிடவும் ஸ்ரீகிருஷ்ணதரிசினம் தனக்கு கிடைக்கவேண்டுமென்று தாரை தாரையாய் கண்ணீர் சொரிந்து மனமுருகி அந்தரங்க பக்தியுடன் பகவானின் கோயிலில் பின்புரம் நின்று கன்னட பதங்களால் கனகதாஸர் மகாஸ்தோத்திரம் செய்துகொண்டு நின்றிருக்க, கோயில் கர்பகிருகத்தின் சுவர் படீரென்று வெடித்து ஓர் பாகம் கீழேவிழுந்து உள்ளிருந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் விக்ரஹம் சரேலென் பின்புறம் திரும்பி கனகதாஸருக்கு ஸேவைஸாதித்துக்கொண்டு அந்த முகமாகவே நின்றுவிட்டது. இப்பவும் ஸ்ரீகோபாலகிருஷ்ணன் கோயிற்வாசற்படியின் முன் திருமுக மண்டலத்தைக்காட்டாமல் திரும்பி நிற்பதால் கனகருக்கு ஸேர்வைஸாதித்த இடைவெளி வாயிலாகவே பக்தகோடிகள் தரிசித்து மகா பலன்களை அடைகின்றனர். இப்பேர்ப்பட்ட பாகவதோத்தமனாய் யமனுடைய அவதாரமான கனகதாஸருக்கும் பக்தகுல நடுநாயகமான ப்ரஹ்லாதனின் அவதாரமான ஸ்ரீவியாஸராஜருக்கும் விசேஷமான ஒற்றுமை இருந்து இவர்களின் பல அற்புத சரிதைகள் சொல்லப்படுகின்றன. ஒருஸமயம் கனகதாஸர் ஸ்ரீவியாஸராஜரின் பல்லக்கை சுமந்துபோய்க் கொண்டிருந்தபொழுது அந்த பல்லக்கில் வீற்றிருந்து மானஸபூஜை செய்துகொண்டிருந்த ஸ்ரீவியாஸராஜர் பகவானுக்கு ஸமஸ்த அலங்காரங்களையும் செய்துவிட்டு கழுத்தில் வைஜயந்தி மாலையைப் போடும்

பொழுது மாலை கழுத்தில் விழாமல் பன்முறை கீழேவிழவும் அதை தமது ஞானதிருஷ்டியால் தரிசித்துக்கொண்டு கவனித்துவந்த கனகதாஸர் குரோ! பகவானுடைய சிரத்தின்மீது வைக்கப்பட்டிருக்கும் கிரீடத்தை எடுத்துவிட்டு அந்த மாலையைப்போட்டால் மாலை தானாகவே கழுத்தில் படிகிறது. ஏன் இவ்வளவு தொந்திரவு என்று உரக்கச் சொன்னார். ஸ்ரீவியாஸராஜர் கனகதாஸரின் திவ்ய சக்ஷுஸ்ஸைக்கண்டு அகமகிழ்ந்தார். அன்றுமுதல் கனகதாஸருக்கு மடத்தில் விசேஷமான சத்காரம் நடந்துவந்தது. ஓர் இடையனுக்கு மகா ஞானியான ஸ்ரீவியாஸராஜர் இவ்வாறு முதல் மரியாதைகளைச் செய்துவருகிறாரே என்று அனேகவித்வான்கள் சந்தாபமடைந்தனர். கனகதாஸரின் உத்தமமான தத்வ ஞானத்தை அறிவிக்க ஸ்ரீவியாஸராஜர் ஓர் உபாயம் செய்தார். சிலபழங்களைக்கொணர்ந்து எல்லாவித்வான்களிடமும் கனகதாஸரிடமும் கொடுத்து ஏகாந்தமான ஸ்தலத்திற்குப்போய் இதைச் சாப்பிடுங்கள். என்று சொல்ல அவரவர்கள் மூலைக்கொருவராய் ஓடி அவைகளை புஜித்துவிட்டு வந்தனர். கனகதாஸர் ஆங்காங்கு சுற்றிவிட்டு சற்குருவே! ஏகாந்தமாய் ஒருவருக்கும் தெரியாமல் இவைகளை புஜித்துவர ஆக்ஞாபித்தீர்கள் எங்கும் ஸ்ரீஹரிவாயு இருக்கின்றனர். திக்தேவதைகள் தத்வாபிமானி தேவர்கள் முதலியோர் இருக்கின்றனரே! நான் ஒருவருக்கும் தெரியாமல் எப்படி புஜிப்பேன். தங்கள் ஆக்ஞை நடைபெறக்கூடியதாயில்லை. என்று பழங்களைத் திருப்பிக்கொடுக்க எல்லா பண்டிதர்களும் வெட்கிப்போயினர். ஸாதனி த்வாதசியன்று ஸ்நானமில்லாமல் கண்புளிச்சையுடனிருந்த கனகதாஸருக்கு தீர்த்தாதிகளைத் தந்து அவருக்கு போஜனாதிகளைச் செய்வித்தாரென்று ஸ்ரீவியாஸராஜரின்மீது ஒருஸமயம் பண்டிதர்கள் பலமாகக்குறைகூறினர். ஸ்ரீவியாஸராஜர் நான் அவனுடையமகிமையை அறிவேன். அதற்காகவே நான் அவனுக்கு அநேக மரியாதைகளைச் செய்கிறேன். நீங்கள் அவனுடைய மகாத்மியத்தை அறியமாட்டீர்கள். இப்போதே ஓடுங்கள். அவனிருப்பிடத்தைக் கண்டுபிடியுங்கள். அவன் என்ன செய்கிறானென்பதை மறைவாய் இருந்து கவனித்துவந்து பிறகு என்னை குறைகூறுங்கள் என்றார். ஸ்ரீவியாஸராஜரின் உறுதியான இவ்வார்த்தையைக்கேட்டு கனகதாஸர் என்ன செய்கிறாரோவென்று பார்க்க ஓடினர். அச்சமயம் கனகதாஸர் ஓர் நதியின் ஏகாந்தமான இடத்திலிறங்கி அங்கிருந்த ஓர் பாறையின்மீது உட்கார்ந்து தான் அன்று போஜனம்செய்த எல்லா பதார்த்தங்களையும் தனித்தனியாய் அன்னம்வேறு, கரிகாய்கள்வேறு, த்ரவபதார்த்தங்கள்வேறு, தயிர்வேறு, நெய்வேறாக வாயிலிருந்து எடு



த்து அவைகளை தனியே அங்குவைத்துவிட்டு நதியிலிறங்கி ஸ்நானம் செய்து அவனுடைய ஜாதிக்குரிய ஆன்ஹிகங்களைச்செய்துகொண்டு பகவத்பூஜை முடித்து அந்த பதார்த்தங்களை பகவானுக்கு நிவேதனம் செய்து மீண்டும் அவைகளை போஜனம் செய்வதை இவர்கள் பார்த்து ப்ரமாச்சரியமடைந்தனர். ஸ்ரீவியாஸராஜரிடம் ஓடிவந்து தாம் கண்டதையெல்லாம் ஒளியாமற் சொல்லி கனகதாஸர் பெரியமகாத்மாவென்றும் அவருக்கு இன்னமும் அதிகமாகவே மரியாதைகளைச் செய்யவேண்டுமென்றும் தாம் செய்த தவறை மன்னிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். ஒருஸமயம் ஸ்ரீவியாஸராஜர் தம்முடையகையில் மறைத்துவைத்துக்கொண்டிருந்தது என்ன வஸ்து என்று கேட்க ஆருடமறிந்த அநேக ஜ்யோதிஷர்களும் விப்ரோத்தமர்களும் அதைச்சொல்லமுடியாமல் திகைத்துநிற்க கனகதாஸரை ஸ்ரீவியாஸராஜர் ப்ரச்னம்செய்ய "ஈதனீக வாஸுதேவனு ரங்கனு" என்ற பதத்தைப்பாடி கையிலுள்ளது வாஸுதேவமூர்த்தி ஸாலக்ராமம் என்றறிவித்தார். இதனால் கனகதாஸர் அபரோக்ஷ ஞானியென்பதை உலகத்தாருக்கு ஸ்ரீவியாஸராஜர் பகிரங்கப்படுத்தினார். இவ்வாறு தாஸர்பதங்களைப்பாடி மகாகீர்த்திபெற்ற ஸ்ரீபுரந்தரதாஸர் ஸ்ரீகனகதாஸர் ஸ்ரீவாதிராஜர் இவர்கள் ஸ்ரீவியாஸராஜரின் சிஷ்யர்களாதலால் ஸ்ரீவியாஸராஜரை தாஸகூடத்தார்களும் ஸ்ரீவியாஸராஜருக்கு எதிர் யாரோ குருவே ஸமர்யாரோ என்று ஸாயான்ஹிககாலத்தில் பாடிவருகின்றனர்.

## ஸ்ரீவிஜயீந்திரரை தானம் கொடுத்தது.

அறுபத்திநான்கு கலைகளில் நிபுணராய் ஸகல சாஸ்த்ர பாரங்கதராய் 108 கிரந்தங்களை இயற்றியவராய் மகாயோகீசுவரராய் அப்பைய்ய தீக்ஷிதரை நிக்ரஹம் செய்தவரான கசியபரின் அம்சமான ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகள் ஸ்ரீவியாஸராஜரின் ஆப்த சிஷ்யரே ஆவார். ஸ்ரீவிஜயீந்திரரின் தந்தை ஸ்ரீவியாஸராஜரிடம் க்ரந்தகாலக்ஷேபம் செய்துகொண்டிருக்க ஸ்ரீவியாஸராஜர் உமக்கு ஸந்ததியுண்டானால் ப்ரதமகுமாரனை எனக்குத்தருகிறீரா! நான் அனுக்ரஹம் செய்கிறேன் என்றார். அவர் அப்படியேத்தருவதாய் வாக்களிக்க ஸ்ரீவியாஸராஜரின் அனுக்ரஹத்தால் ஸ்ரீவிஜயீந்திரர் பிறந்தார். ஜனனகாலத்தில் ஸ்ரீவிஜயீந்திருக்கு பூஸ்பரிசமாகாமல் ஸ்ரீவியாஸராஜர் தங்கத்தாம்பாளத்தில் ஏந்தச்செய்தார். ஸ்ரீவியாஸராஜர் ஸ்ரீவிஜயீந்திரரை குழந்தை முதல் வெகுபட்சமாய் வளர்த்து தமக்கு பின் தமது ஸமஸ்தான

பதவியளிப்பதாய் நிச்சயித்தார். ஸ்ரீவிஜயீந்திரருக்கு ஸகல வித்தைகளையும் கற்றுக்கொடுத்து உபநயனமானவுடனே ப்ரம்மசர்யத்திலிருந்தே ஸன்யாசம் தந்திருந்தார். ஸ்ரீவியாஸராஜர் ஒருசமயம் ஸ்ரீவிஜயீந்திரருடன் ஸ்ரீரங்கத்திற்குச் சென்றிருக்கையில் அங்கு விஜயம் செய்திருந்த ஸுமதீந்திரமடத்திய ஸ்ரீஸுரேந்திரதீர்த்தர் ஸ்ரீவியாஸராஜமடத்துக்குச்சொந்தமான துளசித்தோட்டத்தில் துளசியை எடுக்கப்போய் அவருடைய சிஷ்யர்கள் தடுத்ததை உத்தேசித்து அங்கிருந்த துளஸிகளை எல்லாம் தம்மானஸபூஜையில் பகவானுக்கு ஸமர்ப்பித்துவிட இந்ததத்வத்தை அறியாத சிஷ்யர்கள் ஸ்ரீவியாஸராஜரின் பூஜைக்கு அவைகளைக்கொண்டுவந்து வைத்திருக்கவும் ஸ்ரீவியாஸராஜர் அவைகள் நிர்மால்யமாய் இருந்ததைக்கண்டு ஸுரேந்திரரின் மகிமையைக்கொண்டாடி மறுநாள் ஸுரேந்திரரின் மடத்திற்கே சென்று அவரை தம்முடன் அன்று பூஜாதிகளை நடத்தி பிக்ஷை பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஸ்ரீஸுரேந்திரர் அவ்வாறே அன்றைக்கு வந்து பூஜாதிகளை நடத்தி பிக்ஷைபெற ஆபோசனம் எடுத்துக்கொள்ளும்போது "ஸ்ரீவியாஸராஜரே: தாம்யதேச்சமாய் அவரவர்களுக்கு தானம் செய்துவருவதாய் மிகவும் ப்ரஸித்தி இருக்கிறது. நாம் ஓர் வஸ்துவை வேண்டுகின்றோம். அது தங்களிடத்தில் இருக்கிறது. ஆனால் அதில் தாங்கள் அதிகமான ப்ரியம்கொண்டிருக்கிறீர். தாங்கள் எவ்வளவு ஆசையை அதில் வைத்திருக்கிறீர்களோ அவ்வளவு ஆசையை நாம் கொண்டிருக்கிறோம். அதைத்தாங்கள் கொடுப்பதாய்ச் சொன்னால்தான் நாம் போஜனம் செய்வோ"மென்றார். ஸ்ரீவியாஸராஜர் அதற்கு அந்த வஸ்துவைத்தவிர வேறு எதையும் கொடுக்கத்தயாராக இருக்கிறோமென்றார். வேறு எதையும் வேண்டோம்; அதுதான் நமக்கு வேண்டும்; தாங்கள் கொடுக்காதவரையில் நாம் போஜனம் செய்யப்போவதில்லை; என்று ஸுரேந்திரர் அடம்பிடிக்க ஸ்ரீவியாஸராஜர் ஹரிஸங்கல்பம் பிரபலம், அப்படியே ஆகட்டுமென்றார். ஸ்ரீஸுரேந்திரர் பரமாநந்தத்துடன் போஜனம் செய்தார். ஸ்ரீவியாஸராஜர் தம் கண்ணுக்குக்கண்ணாய் வளர்த்து அவருடைய சம்பூர்ண அனுக்ரஹத்திற்கு பாத்திரமாக இருந்த ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகளை ஸ்ரீஸுரேந்திரதீர்த்த ஸ்வாமிகளுக்கு கொடுத்துவிட்டார். ஆகவே ஸ்ரீவிஜயீந்திரர் ஸுமதீந்திரமடத்தின் பீடாதிபதியாக ஆனார். லோகபூஜ்யரான ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகள் ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகளின் சிஷ்யரின் சிஷ்யராவார்.

(தொடரும்.)

---



மதராஸ் ஹைகோர்ட் ட்ரான்ஸ்லேடர் ஸ்ரீமான் C. J. ராமச்சந்திராசாரியார், எழுதுவதாவது:—

## ஓர் கண்டனம்.

(முன் தொடர்ச்சி.)

சாஸ்திரியார் மத்வாவதாரலீலாத்புத ரகசியங்களை எழுதி பரமபூஜ்யரான ஸ்ரீமன் மத்வாசாரியாரின்பேரில் குறைகூற வேண்டுமானால் ஆசாரியாரின் சரித்திரத்திலோ அவரால் செய்யப்பட்ட கிரந்தங்களிலோ தோஷங்களை ஆதாரத்துடன் பொருக்கியெடுத்துக் கூறவேண்டுமேயல்லாது மனம்போனபடிக்கெல்லாம் எமது பூஜ்யபாதரின் சரித்திரங்களிலும், கிரந்தங்களிலும் கூறப்படாத விஷயங்களைச் சொல்லி பொய்யான தோஷாரோபணம் செய்வது அவர் எல்லோரையும் தமஸ்ஸுக்கு இழுத்ததாகும். இந்த சாஸ்திரிகளின் வார்த்தையை நம்பி நித்திய நரகத்தையனுபவிக்கவேண்டாமென்று ஆஸ்திகர்களை நான் இதன்மூலமாய் எச்சரிக்கின்றேன்.

மேற்கண்ட சாஸ்திரியார் ஆரியதர்மம் 922-வது பக்கத்தில் எமது ஆசாரியாள் வேதாந்தவாக்யங்களாகிய உயர்ந்த புஷ்பங்களை கோர்த்து கட்டப்பட்ட பிரம்ம சூத்திரமாகிய புஷ்பமாலையைத் துண்டித்தும், பிசைந்தும், துவைததாத்பர்யமாகிய துர்கந்தத்தை அதற்கு ஏற்றி அந்த புஷ்பமாலையை அஸாரமாகச் செய்ததாகவும் இது கபிசார்வபௌமனுடைய அவதாரத்திற்கேற்றது என்றும் அபிப்பிராயத்தைக்கொண்ட நீண்டதோர்வ்யாசத்தை எழுதியிருக்கின்றார். சாஸ்திரிகளின் பரமாசாரியரான ஆதி சங்கராசாரியார் அத்வைதிகளின் க்ஷேமத்திற்கென்று கருதி எழுதப்பட்டதாகச்சொல்லும் சங்கரபாஷ்யத்திலேயே இரண்டு பிரம்மசூத்திரங்களால்தான் அத்வைதம் சித்திக்கின்றதென்றும் மற்ற எல்லா சூத்திரங்களும் பேதத்தையே சொல்லுகின்றனவென்றும் வாய்விட்டுகூறியிருப்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் சிறுகுழந்தைகளுக்கும் தெரியும்படி த்வைதமத ஸ்தாபனாசாரியாரென உலக ப்ரசித்திப்பெற்ற ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்தஸ்வாமிகள் பலபாஷைகளில் கிரந்தங்களை பிரசுரப்படுத்தி அத்

வைதத்தை காற்றிலகப்பட்ட பஞ்சைப்போல் பறக்கவிட்டிருப்பதை எல்லா அத்வைதபண்டிதர்களும் பார்த்திருக்கும்பொழுது இந்த சாஸ்திரியார் அதை மறைத்து வேறு வகையாய் சொல்லியிருப்பது மிகவும் ஆச்சரியம். நேருக்குநேரே வாதம்செய்து த்வைதமதத்தைக்கண்டித்து, பிரம்மசூத்திரம் என்னும் புஷ்பமாலையிலிருந்து அவருடைய அபிப்பிராயப்படி துர்க்கந்தமாகிய த்வைதத்தை அவர் போக்கமுடியாமலிருப்பது அவருடைய பலஹீனத்தைக்காட்டுகிறது.

ஷை சாஸ்திரியார் 1010-ம் பக்கத்தில் ஸ்ரீஉத்திராதி மடத்தில் புத்த ஜயந்தி தினத்தில், புத்ததேவருக்கு பூஜை முதலியவை நடந்ததைக் கண்ணுற்ற பெரியோர்களுக்கு த்வைதமதம் அந்தரங்கத்தில் பௌத்தமதமென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கியிருக்குமென்று எழுதியிருக்கிறார்.— பூஜை முதலியது என்பதின் அர்த்தம் விளங்கவில்லை. விதிப்ரகாரமான ஷோடசோபசார பூஜையா? அல்லது உபகாரஸ்மரணையா? செய்யப்பட்டது எது என்று அறிந்துக்கொள்ளாமல் உலகமே மித்தை என்று சொல்லி முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைக்கப்பார்க்கும் சாஸ்திரிகள் புத்ததேவனுக்கு பூஜை செய்யப்பட்டது என்று கூறினது ஆச்சரியப்படத்தக்கதல்ல. வேதத்திலிருக்கும் ஆதாரங்களைக்கொண்டு இதரமதங்களைக்கண்டிக்க சக்தியில்லாது வசை மொழிகளையே ஆயுதங்களாகக்கொண்ட சாஸ்திரியார் புத்தஜயந்தியன்று புத்தரின் பரமோபகார ஸ்மரணை செய்ததை திருத்திச்சொன்னது அவருடைய பாண்டித்யத்தின் தௌர்பல்யத்தையேகாட்டுகிறது.

ஷை சாஸ்திரியார் 1088-ம் பக்கத்தில், மத்வருக்கு பூர்ணப்ரக்ஞர் என்று பெயர் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அதற்குப் பூர்ணமான ப்ரக்ஞையுடையவர் என்று அர்த்தமென்றும் அதனால் ஸர்வக்ஞர் என்று பலிதார்த்தம் ஏற்படுவதாகவும், இந்த பலிதார்த்தத்தினாலேயே ஸ்ரீமன் மத்வாசாரியாருக்கும் புத்தருக்கும், நாமஸாம்யம் இருப்பதாயும், ஆகையினாலேயே மத்வமதம் பௌத்தமதம் என்றும் சொல்லியிருக்கிறார். சாஸ்திரியாரின் பரமாசாரியரான ஆதிசங்கராசாரியார் ருத்திராவதாரமென்று அத்வைதிகள் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

(தொடரும்.)



# ஸ்ரீமத்வமத கிரந்தங்கள்.

(முன் தொடர்ச்சி.)

50. ந்ருஸிம்ஹதீர்த்தர் (வித்யாதீசதீர்த்தரின் சிஷ்யர்.)

407. ஈசாவாஸ்யடிப்பணி.

51. விரக்த ஸ்ரீநிவாஸதீர்த்தர்.

408. தத்வப்ரகாசிகாவ்யாக்யானம்.

52. பாண்டுரங்கி ஆனந்தாசாரியார்

409. மத்வாத்வகண்டகோத்தாரம்.

53. பாண்டுரங்கி கேசவாசாரியார் (குருராஜாசாரியார்) (குருராஜீயம்.)

410. தத்வஸங்க்யானடிப்பணி.
411. தத்வவிவேகடிப்பணி.
412. மாயாவாதகண்டனடிப்பணி.
413. உபாதிகண்டனடிப்பணி.
414. மித்யாத்வானுமான கண்டனடிப்பணி.
415. தத்வநிர்ணயடிப்பணி.
416. தத்வோத்யோதடிப்பணி.
417. கதாலக்ஷணடிப்பணி.
418. பிரமாண லக்ஷணடிப்பணி.
419. கர்மநிர்ணயடிப்பணி.
420. ஸுதாடிப்பணி (சேஷவாக்யார்த்த சந்திரிகா.)
421. ஸுதாவ்யாக்யா (வாக்யார்த்த மஞ்ஜரி.)
422. ப்ரமேயதீபிகாடிப்பணி.
423. தத்வப்ரகாசிகாடிப்பணி.
424. ரிக்பாஷ்யடிப்பணி.
425. சந்திரிகாடிப்பணி. குரு லகு.

54. கண்டு ஸ்ரீநிவாசாசாரியார் (பாண்டுரங்கி கேசவாசாரியார் குமாரர்)

426. தத்வப்ரகாசிகாடிப்பணி.
427. ஸுதாடிப்பணி.

55. தாம்பரபர்ணி விட்டலாசாரியார்.

428. தத்வஸங்க்யானடிப்பணி.
429. ஐதரேயடிப்பணி.
430. பிருஹத்தாரதம்மியஸ்துதி.
431. அணுதாரதம்யஸ்துதி.
432. பிரமாணபத்ததி டீகை.
433. ஸுதாடிப்பணி.
434. கீதாதாத்பரியடிப்பணி.
435. மணிமஞ்ஜரி வ்யாக்யானம்.
436. விரோதோத்தாரம்.

56. தாம்பரபர்ணி ஸ்ரீநிவாசாசாரியார்.

437. மாயாவாதகண்டனடிப்பணி.
438. தத்வஸங்க்யான டிப்பணி.
443. ஷட்பிரச்னடிப்பணி.
444. தந்திரஸாரடீகை.

439, தத்வவிவேகடிப்பணி
440. தத்வநிர்ணயடிப்பணி.
441. ஐதரேயபாஷியவிவரணம்.
442. தைத்திரீயடிப்பணி.
445 தாத்பரியநிர்ணயடீகை.
446 ப்ரமாணபத்ததிடிப்பணி.
447. தத்வப்ரகாசிகாடிப்பணி. (ப்ரமேயமுக்தாவளி.)
448. வாக்யார்த்தமுக்தாவளி.

57. தாம்பரபர்ணி ஆனந்ததீர்த்தாசாரியார்.

449. ஸத்தத்வரத்னமாலா.
450. ஸத்தத்வரத்னமாலாடீகை.
451. தந்திரஸாரடீகா.
452. பாகவததாத்பர்யடீகா.

58. தீர்த்தாசாரியார்.

453. நியாயவிவரணடிப்பணி.

59. சலாரிநரஸிம்மாசாரியார்.

454. தத்வஸங்க்யானடிப்பணி.
455. ரிக்பாஷியடிப்பணி.
456. ஈசாவாஸ்யடிப்பணி.
457. ஷட்ப்ரச்னடிப்பணி.
458. யமகபாரதவ்யாக்யா.
459. ஸதாசாரஸ்மிருதி டீகா.
460. பாகவததாத்பர்ய டீகா.
461. ஸ்மிருத்யர்த்தஸாகரம்.
462. பிரம்மஸூத்ர அதிகரணார்த்த ஸங்கிரஹம்.
463. பிரமாணபத்ததி டீகை.
464. ஸங்கிரஹராமாயணடீகை.
465 ஆன்ஹிகதரங்கிணீ.
466. பாரிஜாதஹரணவ்யாக்யானம்.
467. சிவஸ்துதிவ்யாக்யானம்.
468. பிருஹத்தாரதம்யஸ்துதி.
469. பட்டோஜிதீக்ஷிதகிருதிகுட்டனம்.

60. சலாரி சேஷாசாரியார்.

470. அணுபாஷியடிப்பணி.
471. தத்வஸங்க்யானடிப்பணி.
472. கர்மநிர்ணயடிப்பணி.
473. ஷட்ப்ரச்னடிப்பணி.
474. தந்திரஸாரவ்யாக்யானம்.
475. பாகவததாத்பரியடிப்பணி.
476. ஷட்ப்ரச்னவ்யாக்யானம்.
477. வாயுஸ்துதிவ்யாக்யானம்.
478. பிரமாணசந்திரிகா வியாக்யா.
479 மத்வவிஜயவ்யாக்யானம்.
480. நரஸிம்ஹநகஸ்துதிவ்யாக்யானம்.
481. நிர்ணயரத்னம் தர்மசாஸ்திரம்.
462. மணிமஞ்ஜரிவ்யாக்யானம்.

61. சலாரி சங்கர்ஷணாசாரியார்.

483. ஜயதீர்த்தவிஜயம்.
484. ஜயதீர்த்தவிஜயடீகா.

62. சலாரி ஸ்ரீநிவாஸாசாரியார்

485. தத்வஸங்கிரஹரம்.
486. ஸத்யநிதிவிலாஸம்.
4S7. அணுமத்வவிஜயடீகா.

(தொடரும்.)



# ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய
# மணிமஞ்ஜரி.

## நான்காவது ஸர்க்கம்.

(முன் தொடர்ச்சி.)

நான் பார்வதியை இவ்வாறு சொல்ல பார்வதி தனக்கு ஸமமானவர்களான ஸௌபர்ணி, வாருணி முதலியவர்களை ரக்ஷிப்பதால் பர்வதரெனப்படும் சிவசேஷ கருடன்களை தன்யர்கள் ஆச்சரியமானவர்கள் என்ருள். அவர்கள் பிரம்மாவை தன்யர் ஆச்சரியமானவர் என்று சொல்ல பிரம்மா வேதாபிமானியாய் விஷ்ணுபத்னியான லக்ஷ்மீதேவியை தன்யள் ஆச்சரியமானவள் என்ருர். நான் மகாலட்சுமியை அவ்வாறு சொல்ல நான் யக்ஞனெனப்படும் நாராயணனுடனிருக்கும்போதுதான் தன்யள் என்று மகாலட்சுமி சொல்ல நான் யக்ஞமூர்த்தியின் துடையின்மீது மகாலட்சுமி உட்கார்ந்திருக்கும்போது மகாலட்சுமியை நீ தன்யள் ஆச்சரியமானவள் என்றேன். அவள் பகவான் நாராயணர்தான் ஸர்வோத்தமர் என்ருள். பகவானுடைய அவதாரத்தில் பேதமில்லை என்றெண்ணி இச்சமயம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை நீர் தன்யர், நீர் ஆச்சரியமானவர் என்றதற்கு பகவான் வேதாபிமானியாய் யக்ஞமென்ற பெயர்கொண்டவளாய், யக்ஞத்தில் கொடுக்கப்படும் தக்ஷிணைக்கு அபிமானியாயுள்ள லக்ஷ்மீரூபங்களுடன் சேர்ந்த, எல்லா ஜகத்தைவிட நான் ஸர்வோத்தமன் என்று இப்போது அறிவித்துள்ளார். அந்த தக்ஷிணாதேவியின் அவதாரம் ருக்மணி. அவளைவிட உத்தமர் நாராயணரான இந்த ஸ்ரீ கிருஷ்ணர்தானென்று நாரதர் சொன்ணர். இங்கு கூடியிருந்த எல்லா அரசர்களையும் குருபாண்டவாதிகளையும் நீ ஜயித்தாய் என்ருல் நாரதர் சொன்னபடி நீ தன்யன் ஆச்சரியனென்பேனென்று குந்தி சொல்ல பகவான் எல்லாருடன் மகாயுத்தம் செய்து ஓர் க்ஷணத்தில் ஜெயித்து தான் ஸர்வோத்தமனென்பதை விளக்கிக்காட்டினுர். நாரதர் இவ்வாறு ருக்மணியை ஸ்தோத்திரம் செய்து தேவலோகத்து பாரிஜாத மலரை ருக்

மணியிடம் கொடுத்துப்போக ஸத்யபாமை பொறுமைகொண்டவள்போல் காட்டி கோபகிருஹத்தை நாடவும் ஸ்ரீகிருஷ்ணர் தேவலோகத்திலிருந்து பாரிஜாதவிருக்ஷத்தையே கொண்டுவந்து கொடுப்பதாய் வாக்களித்தார். ஸ்ரீகிருஷ்ணர்தான் வராஹாவதாரம் செய்த காலத்தில் பூதேவியிடம் பிறந்த நரகாஸுரனை மகேந்திரனின் பிரார்த்தனையின்பேரில் கொல்வதற்காக ஸத்யபாமையுடன் கருடன்மீதேறி அவனுடைய நகரமாகிய ப்ராக்ஜோதிஷபுரம் வந்து அங்குள்ள துர்க்க ஸ்தலங்களையெல்லாம் தாண்டி அவனுடன் மகாயுத்தம்செய்து அவனை ஸம்ஹரித்து அவனிடமிருந்த அநேக அமூல்யமான பதார்த்தங்களை தன்வசமாக்கி அவனால் அடைத்துவைக்கப்பட்டிருந்த மகாரூபவதிகளான பதினாயிரத்திநூறு கன்னிகைகளையும் த்வாரகைக்கு அனுப்பிவிட்டு ஸ்வர்க்கலோகம்வந்து ஸத்யபாமையின் அபிப்பிராயப்படி நந்தவனத்திலிருந்து ரத்னமயமான பாரிஜாத விருக்ஷத்தைப்பிடுங்கி கருடன்மீதுவைத்து புறப்பட மகேந்திரன் தேவர்களுடன் அதற்காக மகாயுத்தம் செய்ய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி எல்லா தேவதைகளையும் தோற்கடித்து மகேந்திரனுக்கு நற்புத்தி புகட்ட மகேந்திரன் தேவர்களுடன் ஸ்ரீகிருஷ்ணருடைய காலில் விழுந்து மன்னிப்புக்கேட்டுக்கொண்டு பாரிஜாத விருக்ஷத்துடன் அற்புதமான மாணிக்யபர்வதத்தையும் தந்தார். 32. ப்ராக்ஜோதிஷபுரத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த பதினாயிரத்துநூறு கன்னிகைகளையும் பதினாயிரத்துநூறு ரூபங்களுடன் ஸ்ரீகிருஷ்ணர் ஒரே முகூர்த்தத்தில் விவாஹம் செய்துகொண்டு அவ்வளவு ரூபங்களுடனேயே தனித்தனியே அவர்களுடன் விஹாரம் செய்துகொண்டு ஒவ்வொரு ஸ்திரீயிடமும் பத்து குமாரர்களும் ஒரு ஸ்திரீயும் வீதம் இத்தனை ஸ்திரீ ஜனங்களிடமும் சந்ததியை உண்டாக்கினார். 33. நாரதருடைய வாக்யத்தின்பேரில் பாண்டவர்கள் ராஜஸூய யாகம் செய்ய அவர்களின் ஐசுவரியத்தில் மாச்சரியங்கொண்ட துரியோதனாதிகள் பாண்டவர்களின் ஐசுவரியத்தை அபகரிக்க சொக்கட்டானாடவும் அதில் பாண்டவர்கள் தோற்றுப்போய் சொக்கட்டானாட்டத்தில் பந்தயம் போட்டுக்கொண்டதை அனு



சரித்து பராஜயமடைந்த பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷம் வனவாஸமும் ஒரு வருஷம் அக்ஞாதவாஸமும் செய்து முடித்து உபப்லாவ்யம் என்ற பட்டணத்தில் தங்கியிருந்தனர். அங்கு பகவான் ஸ்ரீகிருஷ்ணர் எல்லா யாதவர்களுடன் வந்துசேர பாண்டவர்கள் ஸ்ரீகிருஷ்ணரை சரணமாக அடைந்தனர். 34. திருதராஷ்டிரன் பாண்டவர்களுக்கு பாதிராஜ்யத்தைக்கொடுக்க அவர்கள் எவ்வளவு சொல்லி அனுப்பியும் மறுத்துவிடவும் ஸ்ரீகிருஷ்ணர் சுயம் உபப்லாவ்யபட்டணத்திலிருந்து ஹஸ்தினாபுரத்துக்கு திருதராஷ்டிரனிடம் தூது சென்றவர்போல் நடித்து ஸ்ரீகிருஷ்ணரைக் கட்ட உத்தேசித்திருந்த துரியோதனாதிகளின் பாப புத்தியை பிரகடனம் செய்து அவர்களால் தன்னைக்கட்ட முடியாதென்று அவர்களுக்கு தன் விச்வரூபத்தைக்காட்டி துரியோதனனின் மனதைத்திருப்ப அவருக்கு சக்தியிருப்பினும் துரியோதனாதி அஸுரர்களை அந்தம் தமஸ்ஸில் வீழ்த்த தன்னுடைய வாக்யத்தை அவர்கள் நிறைவேறாமலிருக்குப்படி அவர்களை வஞ்சித்து 18 நாள் குருபாண்டவ மகாயுத்தம் நடக்கும்படிச்செய்து சுயம் தான் ஆயுதங்களை எடுத்து அவர்களைக் கொல்லாமல் அர்ஜுனனுடைய தேர்தட்டில் பார்த்தனுக்கு ஸாரதியாய் உட்கார்ந்துகொண்டு துரியோதனாதிகளின் பதினொன்று அக்ஷௌஹிணி ஸைனியத்தில் பீமசேனனைக்கொண்டு ஆறு அக்ஷௌஹிணியையும் அர்ஜுனனைக்கொண்டு 4½ அக்ஷௌஹிணி சைனியத்தையும் கொல்லச்செய்து பக்தர்களான பாண்டவர்களை ஸம்ரக்ஷித்து நிஷ்கண்டகமான ராஜ்யத்தை அவர்களுக்கு தந்து அவர்களுக்கு ஸர்வ மங்களங்களையும் அளித்து அனுக்ரஹித்தார். 35. பூபாரத்தைத்தொலைக்கவந்த ஸ்ரீகிருஷ்ணர் அவரைச் சேர்ந்ததாயுள்ள பிரம்மாண்டமான ஜனஸங்கியையுள்ள யாதவ வம்சத்திற்கு பிராம்மணர்களின் சாபம் ஏற்படும்படி செய்து, மைரேயம் முதலான மத்யங்களை பானம்செய்து உன்மத்தர்களாய் ப்ரபாஸ க்ஷேத்திரத்தில் கூடியிருந்த அவர்களில் ஒருவருக்கொருவர் சத்ருபாவத்தை அடையும்படிச் செய்து எப்படி மூங்கில்கொத்திலுள்ள மூங்கில்களை காற்று ஒன்றுக்கொன்று உரையும்படி செய்து அதனால் அக்னியை உண்டாக்கி அவை

களை கொளுத்தி சாம்பலாக்கிவிடுமோ அதுபோலவே ஸ்ரீகிருஷ்ணர் அந்த யது குலத்தார்கள் ஒருவருக்கொருவர் அந்த பிராம்மண சாபத்தால் யுத்தம் செய்யும்படி செய்து அந்த கூட்டத்தை வெகு சீக்கிரம் சம்ஹரித்தார் 36. பிறகு ஸ்ரீகிருஷ்ணர் அவருடைய சிஷ்யரான உத்தவனையும் ஸநகாதியோகிகளையும் துர்வாஸர் முதலான மகரிஷிகளையும் அவர்களின் சிஷ்யர்களையும் வேதவேதாந்தங்களை பாடப்ரவசனம் செய்து வைதிகதர்மங்களை ஜனங்களுக்கு அறிவித்துவர நியமனம் செய்தார். 31. இவ்வாறு அதியற்புதமான சரித்திரமுள்ள ஸ்ரீகிருஷ்ணர் தான் எடுத்த அவதாரத்தின் காரியம் முடிவடைந்துவிட்டபடியால் பிரம்மாதிகளின் ப்ரார்த்தனையின்பேரில் இனி வைகுண்டம் போகப்போவதாயும் பாண்டவர்களையும் அவர்களின் லோகத்திற்கு போகும்படியும் தாருகன் மூலமாய் சொல்லியனுப்பிவிட்டு ஜரை என்ற வேடனின் பாணப்ரஹாரத்தை வியாஜமாகக்காட்டி அவனுடைய சாபபரிகாரம் செய்து அவனை பிருகுமுனியாக்கிவிட்டு பகவான் தேஜ: புஞ்ஜராய் வைகுண்டத்திற்கு புறப்பட்டார். கோபாலமந்த்ரத்தை ஜபிக்கும் ஜனங்களுக்கு பலனைத் தருபவராய் ஓர் ரூபத்துடன் பூமியில் நின்றார். மற்றொரு ரூபத்தால் சூரியமண்டலத்திலும் மூன்றாவது ரூபத்தால் பரமசிவனால் பூஜிக்கப்பட்டவராய் சிவனுடைய லோகத்திலும் நான்காவது ரூபத்தால் சதுர்முகனால் பூஜிக்கப்பட்டவராகி பிரம்மலோகத்திலும் நின்று பிறகு ஐந்தாவது ரூபத்தால் வைகுண்டத்திற்குள் பிரவேசித்தார். 38. இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியையே ஸகாயமாய்க் கொண்ட அவருடைய பக்தர்களான பாண்டவர்கள் ஸ்ரீகிருஷ்ணத்வேஷிகளான துரியோதனாதிகளை ஸம்ஹரித்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு மகாஸேவைசெய்துவிட்டு அர்ஜுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் சகோதரியான ஸுபத்ராதேவியிடம் பிறந்த அபிமன்யுவின் பிள்ளையான பரீக்ஷித்ராஜனிடம் தங்கள் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு த்ரௌபதியுடன் மகாப்ரஸ்தானம் புறப்பட்டு வழியில் யோகசக்தியால் தங்கள் சரீரத்தைவிட்டு ஸ்ரீகிருஷ்ணனை பின் தொடர்ந்து அவரவர்களின் ரூபத்தை அடைந்தனர். 89. பிறகு பரீக்ஷித்துராஜன் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் பௌத்திரனான அநிருத்தனின் மகனான வஜ்ஜிரராஜனுடன் சேர்ந்து ஸப்தஸமுத்ராந்த பூமியை ஜயித்து ராஜ்ய பரிபாலனம் செய்துகொண்டு தம் குலதெய்வமான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஸர்வாந்தர்யாமி ஸர்வோத்தமரென்ற பாவனையுடன் பிரகாசித்திருந்தார். நான்காவது ஸர்க்கம் முடிந்தது.

# மாத்வமித்திரன்.

## Vol. III.—புஸ்தகம் 3 (1930-31)


| | தொடர்ந்த க்ரந்தங்கள். | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 3. (அத். 8 சுலோ. 102) 35 (131) 67 (157) 99 (179) 131 (208) 165 (248) 197 (9.22) 229 (46) 265 (9.103) 289 (10.7) 321 (51) 361 (11.9). |
| 2. | ஷட்பிரச்ன உபநிஷத். | 15 (ப்ர. 1 மந். 1) 39 (1.5) 181 (1.10) 261 (2.7+3.1) 297 (3.6) 329 (4.2) 353 (4.6). |
| 3. | ஸ்ரீமத்வாசாரியாரின் உபதேச மொழிகள் (கிருஷ்ணாமிர்த மகார்ணவம்.) | 1 (சுலோ 133) 33 (145). |
| 4. | புருஷஸூக்தம். | 17, 45, 85, 113, 137, 171, 215, 259. |
| 5. | ஸ்ரீவியாஸராஜஸ்வாமிகளின் சரித்திரம். | 19, 87, 141. |
| 6. | தத்வப்ரகாசிகை (ஸ்ரீஜயதீர்த்தர்.) | 13. |
| 7. | யுக்திமல்லிகை (ஸ்ரீவாதிராஜர்.) | 55. |
| 8. | ஸ்ரீமத்வாசாரியார் சரித்திர நாடகம். | 9, 41, 81, 177, 203, 233. |
| 9. | போஜன விதானம். | 115, 135, 163, 195, 227. |
| 10. | ஸ்ரீகோபாலதாஸர் சரிதை (மைசூர் ஸ்ரீநரஹரிதாஸர்.) | 117, 201. |
| 11. | துவாதசஸ்தோத்திரம் (ஸ்ரீமத்வாசாரியார்.) | 273 (அத். 1,2) 301 (அத் 3, 4, 5-2) 332 (அத். 5, 6, 7-7) 357 (7,8). |
| 12. | அனுஜயதீர்த்தவிஜயம். | 377 (சுலோ. 10). |

13. ஸ்ரீமத்வமதத்தின் இரகசியங்கள், (ஸ்ரீவாஸுதேவதீக்ஷிதர்.) 65, 97, 161, 193, 225, 257.
14. யக்ஞம். 369.

கதா விசேஷங்கள்.

1 விநாயகசதுர்த்தி கதை 21
2 வெங்கடேச கல்யாணம் 47
3 கஜேந்திரமோக்ஷம் 77
4 அமிர்தமதனம் 105
5 தனுர்மாஸவைபவம் 146
6 துரௌபதியின் பஞ்சபத்னித்வம் 173
7 தக்ஷயாகம் 207

இதர நிரூபங்கள்.

1 நமது மதம் (ஸ்ரீமான் சுப்பராயாசாரியார்) 7
2 நாமங்களை தரிப்பதவசியம் 71
3 ஸ்ரீராமாயணத்தின் உட்கருத்து 75
4 ஆசௌசம் (ஸ்ரீவாஸுதேவதீக்ஷிதர்) 140
5 செய்கடன் யாதோ (ஸ்ரீமான் T. V. கிருஷ்ணஸாமிராவ்) 143, 186
6 ஹரிதாஸனிடம் ஆத்திரம் (ஸ்ரீனிவாஸராவ் மதருஸ்) 53
7 ஸ்ரீராகவேந்திரஸ்வாமி ப்ரதிவாதியாம் (ஸ்ரீமான் V. குப்பண்ணாராவ்) 139
8 திருப்பதி ஸ்ரீமத்வசித்தாந்த சபைகள் 153
9 ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் விஜயம் 239
10 இது பெரியாரின் மேன்மையே (ஸ்ரீபாகவத ரங்கநாதாசாரியார்) 244
11 துவைதாத்வைத விசாரசபை 276
12 அத்வைதிகளின் ஆத்திரம் 305
13 மோக்ஷம் (ஸ்ரீமான் எம். ராமராவ்) 337,373

தலையங்கங்கள்.

1 ஸ ஆத்மாதத்வமணி V. 25
2 ,, VI. 57
3 ,, VII. [89
4 ஸ ஆத்மாதத்வமணி VIII. 121
5 ,, IX. 145
6 ,, X. 183
7 ஓர் மறுப்பு 217

# மாத்வமித்திரன்

## Vol. IV.—புஸ்தகம் 4. (1931–32.)

1 ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) 1. (அத் 11. சுலோ 51) 33 (95) 65 (172) 97 (220) 129 (12-27) 161 (79) 193 (121) 245 (13-30) 273 (13.52) 307 (95) 339 (14. 2) 369 (43).
2 ஷட்பிரச்ன உபநிஷத் 9 (அத் 5 6.2) 41 (6).
3 துவாதசஸ்தோத்திரம் (ஸ்ரீமத்வாசாரியார்) 13 (அத் 9, 10, 11-9).
4 புருஷஸூக்தம் 17, 43
5 ஸ்ரீவியாஸராஜஸ்வாமிகளின் சரித்திரம் 19, 52, 141, 177, 201, 267, 377.
6 அணுஜயதீர்த்தவிஜயம் 45 (22) 81 (34).
7 மணிமஞ்ஜரி (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்) 85(ஸர்1 சுலோ 5)109 [1.15]137(1.26)169(1,2-22) 209 (2,3-19) 251 (3.31) 261 (4.13) 325 (23) 353 [4.31).
8 காடகோபநிஷத் 139 (1.5) 173 (1.19) 205 (1.26) 299
9 ஆசாரமாலை 207, 259, 323, 363. [1,2-9]331[20]365[3-10]
10 மத்வமதத்தின் இரகசியங்கள் 257, 321.
11 ஸ்ரீமத்வமத கிரந்தங்கள் 242, 265, 297, 329, 357.
12 ஸ்ரீநரஸிம்ஹஸ்துதி [ஸ்ரீநாராயணபண்டிதாசாரியார்] 291.

இதர நிருபங்கள்.


1 ஸ்ரீகோபாலதாஸர் சரிதை [மைசூர் நரஹரிதாஸர்] 23
2 ஸ்ரீராகவேந்திரரின் லீலாவிநோதங்கள் 26
3 மோக்ஷம் 49
4 அத்வைதிகள் விபூதி ருத்திராக்ஷம் தரிப்பானேன்? 57
5 மதுரையில் நடைபெற்ற துவைதாத்வைத விதாதம் 62, 77.
6 ஸ்ரீஜகந்நாததாஸர் சரித்திரம் 105, 189, [மைசூர் நரஹரிதாஸர்] 249, 271.
7 தடபுடல் பூஜை 113
8 ஹரிஸர்வோத்தம ஸர்வசமனேகே தாஸர் பதத்தின் தாத்பரியம் 118
9 ஓர் உபன்யாஸம் (பாகவதரங்கநாதா சாரியார்) 145
10 பூஜாகாலத்தில் காட்டப்படும் ஷண் முத்திரைகளின் விபரம் 156
11 சுயம்பாகம், பொங்கல், தாம்பூலம் 157
12 தேவாஸுரர்களின் அம்சாவதாரணம் [ஸ்ரீராமாவதாரகாலம்] 160
13 திருப்பதி ஸபைகள் 181
14 ஓர் அத்வைதியின் அறிக்கை 229
15 மைசூர் அத்வைதிகளின் கூக்குரல் 233
16 அத்வைதமதம் பௌத்தமதமே 235
17 சிறுவர்களுக்கான கதை 289
18 ஸ்ரீராகவனுடைய வனவாசத்தின் தினசரி சம்பவக்குறிப்பு 303
19 இரவில் அதிகநேரம் போஜனத்தகாது [மைசூர் நரஹரிதாஸர்] 319, 335.
20 காபி பானம் (கா.பே. வாஸுதேவ தீக்ஷிதர்) 350
21 ஓர் கண்டனம் [ஸ்ரீமான் C.J. ராமச் சந்திராசாரியார், ஹைகோர்ட் டிரான்ஸ் லேடர்] 359




# ப்ரமாண சந்திரிகை.

கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல் ஸ்ரீமான் எம். ராமராவ் எழுதுவதாவது :—

எமது வேதாந்த கிரந்தங்களை முற்றும் அறியவேண்டுமாயின் ப்ரமாணங்களின் ஆராய்ச்சி இன்றியமையாததாகும். மேலும் பரதத்வமான பகவான், அபரதத்வமான இந்த ஜகத்து, இவர்களும் பிரமாணங்களின் மூலமாகவே அறியப்படவேண்டியவை ஆதலால் இந்த ஆராய்ச்சி மோக்ஷஸாதனமாயும் ஆகிறது. ஆகவே ப்ரமாணங்களின் ஸ்வரூபத்தைப்பற்றியும் லக்ஷணத்தைப்பற்றியும் இங்கு நாம் ஆராய்வோம்.

நமது பாஷ்யகாரர் [ப்ரமாண லக்ஷணம்] என்ற நூலையும் ஸ்ரீஜயதீர்த்தமுனிவர் [ப்ரமாணபத்ததி] என்ற நூலையும் இயற்றியிருப்பினும் அவை ஆழ்ந்த அபிப்பிராயமுள்ளவையாயிருப்பதால் சாதாரண அறிவு படைத்தவர்களால் அறியமுடியாதவை. ஆகையால் ஸ்ரீமான் சலாரி சேஷாசாரியார் என்பவரால் எழுதப்பட்ட [ப்ரமாணசந்திரிகை] என்ற கிரந்தங்களிலுள்ள முக்ய விஷயங்களை எமது மாத்வமித்திரன் வாசகர்களுக்கு அறிவிக்க எத்தனப்படுகிறேன். இந்நூல் ப்ரத்யக்ஷ பரிச்சேதம், அனுமான பரிச்சேதம், ஆகம பரிச்சேதம், என்ற மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதன் முதல் சுலோகமாவது :—

லக்ஷ்மீபதே: பதாம்போஜ யுகம் நத்வா குரோரபி, ப்ரமாண சந்திரிகாம் குர்மோ பாலானாம் போத ஸித்தயே ||. ஸ்ரீ லக்ஷ்மீபதியான ஸ்ரீமந் நாராயணனுடைய தாமரைபோன்ற இரு பாதங்களையும் குருவினுடைய பாதகமலங்களையும் நமஸ்கரித்து சிறுவர்களுக்கு அறிவையுண்டாக்க பிரமாண சந்திரிகை என்ற நூலைச் செய்கிறோம். ப்ரமாணங்களை அறியுமுன்னர் உத்தேசம் லக்ஷணம், பரீக்ஷை, முதலியவைகளைப்பற்றி அறியவேண்டிய தவசியம்.

20896

I. உத்தேசம்:- ஓர் பொருளின் லக்ஷணத்தைக் குறிக்காததும் ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ளதும், ஓர் பொருளைக்குறித்துக்காட்டுவதாயும், எழுத்துக்களால் அமையப்பெற்றதாயுமுள்ள சப்தத்துக்கு உத்தேசம் என்று பெயர். [அதாவது] எந்தப் பொருளின் லக்ஷணத்தைச் சொல்கிறோமோ அந்தப் பொருளின் பெயரை ஸம்ஸ்கிருதத்தில் உச்சரிப்பதேயாகும். உதாரணமாக ப்ருதிவியின் லக்ஷணத்தைச் சொல்லும் கந்தவதீ ப்ருதிவீ [மண் வாஸனையுள்ளது பூமி] "ப்ருதிவீ" என்பது உத்தேசம். 2. எதனுடைய லக்ஷணம் சொல்லப்படுகிறதோ அதற்கு "லக்ஷ்யம்" என்று லக்ஷணத்தைக்கூறும் வாக்யத்திற்கு லக்ஷணவாக்யம் என்று பெயர். உதாரணமாக ஒரு கோ (பசு)வின் லக்ஷணத்தைச் சொன்னால் கோ என்பது லக்ஷ்யம்.

3. லக்ஷணம்:- எவை 'லக்ஷ்ய'மல்லவோ அவைகளில் இல்லாததாயும். எல்லா லக்ஷ்யங்களிலுமே இருப்பதாயுமுள்ள ஓர் தர்மம்தான் லக்ஷணம் எனப்படும். உதாரணமாக, ஸாஸ்னம் முதலியவைகளைப் பெற்றிருத்தல் என்பது கோ (பசு)வின் லக்ஷணமாகிறது. "ஒற்றைற்குளம்புள்ளது" என்பது பசுவின் லக்ஷணமாகாது. ஏனென்றால் அந்த தர்மம் பசுவாகிற லக்ஷ்யத்திலேயே இல்லை. 'பல நிறங்களுள்ளது' என்பதும் பசுவின் லக்ஷணமாகாது. ஏனெனில் சில பசுக்கள்தான் அம்மாதிரியிருக்கும் "கொம்புள்ளது" என்பது லக்ஷணமாகாது. ஏனென்றால் லக்ஷ்யமல்லாத, ஆடு, எருமை முதலியவைகளும் கொம்புள்ளவைகளாயிருக்கின்றன என்று அறியவும். (தொடரும்.)

## விக்ஞாபனம்.

எமது சந்தாதார நேயர்களின் சௌகரியத்தை உத்தேசித்து அவர்களின் அன்பார்ந்த ஆதரணையையும் கூட்டுறவையும் அதிகமாகப்பெற எண்ணங்கொண்டு வழக்கப்படி இந்த வருடத்திய முதல் சஞ்சிகையான இந்த சஞ்சிகையை V.P.P. யில் அனுப்பாமல் புக்போஸ்டிலேயே அனுப்பியிருக்கிறோம். தற்போது ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணம் 3 அணா உயர்த்தப்பட்டிருக்கிறதென்பதும் V.P.P. 3 நாளுக்குமேல் தங்காதென்பதும்



எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. ஆகவே எமது மாத்வமித்திரனில் இதுகாறும் ஓரேவகையான அன்பை வளர்த்திவரும் எமது சந்தாதார நேயர்கள் அதிக சிலவுக்கு உள்ளாகாமல் கூடிய சீக்கிரத்தில் சந்தாதுகையை மணியார்டர்மூலம் அனுப்பக்கோருகிறோம். சந்தா அனுப்பாதவர்களுக்கு எமது பத்திரிகை அனுப்பப்படமாட்டாதென்ற எமது நியமத்தை அனுஸரித்து அடுத்த பௌர்ணமியன்று அதற்குள் சந்தாதுகை அனுப்பாத சந்தாதாரர்களுக்கு V.P.P. செய்யப்படும். எங்களுக்கு அந்த சிரமம் கொடுக்காதிருக்க மீண்டும் சந்தாதாரர்களை வேண்டுகிறோம். சந்தாதாரர்களின் சங்கியைக்குத்தக்கபடி பத்திரிகைகள் அச்சிடப்படுவதால் தற்போதே வழக்கப்படி ரிஜிஸ்டர்செய்து கொள்ள கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம்,
கும்பகோணம்.

## மகாமகதத்வம் அடங்கிய திருக்குடந்தை புராண வசனம்.

கும்போற்பத்தியும் கும்பகோணமென்று பெயர்வந்த காரணமும் பஞ்சக்ரோசயாத்திரையும் மகாமக தத்வமும் ஸ்நான விதிகளும் செய்யவேண்டியதானங்களும் அதன் பயன்களும் தீர்த்தமாடி இஷ்டஸித்திகளையடைந்தோர் சரித்திரங்களும் நவகன்னியர் அர்ச்சனையும் ஸ்ரீஆதிகும்பேசர் முதலிய பல வைபவங்களும் பொற்றாமரை காசிப சக்கர பகவ மங்களகூப தீர்த்த விசேஷங்களும் காவிரி மகிமையும் தனித்தனியாயும் விஸ்தாரமாயும் தெளிவாயும் அறுபத்திரண்டு படலங்களாக எழுதப்பட்டுள்ளன. அச்சில் விலை ரூ. 1—0—0.

M. சிங்காரவேலுப்பிள்ளை,
மூர்த்திசெட்டித்தெரு, கும்பகோணம்.

## பிழை திருத்தம்.

சென்ற சஞ்சிகையில் 381-வது பக்கத்தில் மதிப்புரையில் கண்ட புஸ்தகத்தின் பெயர் நாரதர். அப்பெயரைக்கண்டு அதன் ஆசிரியருக்கு ஆர்டர் செய்யவேண்டியதாகும்.

## செய்தித்திரட்டு.

கோயமுத்தூர் மத்வஸித்தாந்த புபுத்ஸஸபாவின் ஆதரணையில் 21—7—32 முதல் 3 நாட்கள் ஸ்ரீஜயதீர்த்தரின் புண்யதினம் வெகு வாய்கொண்டாடப்பட்டதென்று ஸ்ரீமவே ஸ்ரீனிவாசாசாரியார் ஜய தீர்த்தரின் சரித்திரத்தையும் தெக்களூர் கிருஷ்ணாசாரியார் ஜயதீர்த்தரின் கிரந்தங்களின் சாராம்சத்தையும் ஸ்ரீமவே விஜயீந்திராசாரியார் டீகா கிருத்பாதாஷ்டகத்தின் தாத்பரியத்தையும் முறையே உபன்யஸித்தார் களென்றும் ஸ்ரீமான் நரஸிம்மாசார் தாஸர்பதங்களைப் பாடினரென்றும் ஸ்ரீ T,G. கோகுலசந்திரராவ் அறிவிக்கிறார்.

திருநெல்வேலி டவுன் பெருமாள் மேலரதவீதி ஸ்ரீஆஞ்ஜனேயர் கோயிலில் ஸ்ரீஜயதீர்த்தரின் புண்யதினம் கொண்டாடப்பட்டதென்றும் அன்று ப்ராம்மண போஜனாதிகள் நடந்ததென்றும் மாலை கோயமுத்தூர் ஸ்ரீமான் வைத்ய ரங்காசாரியார் பக்கமேளங்களுடன் ஸ்ரீஜயதீர்த்தரின் சரித்திரத்தை ஹரிகதாகாலக்ஷேபம் செய்தாரென்றும் தர்மகர்த்தா ஸ்ரீமான் ஆசி, வெங்கட்டரமண ஆசார்யார் வந்தனோபசாரம் செய்தா ரென்றும் நமது நிருபர் அறிவிக்கிறார்.

கரூருக்கடுத்த கிருஷ்ணராஜபுரம் ஸ்ரீலக்ஷ்மீநாராயணஸ்வாமி ஸ்ரீ ஆஞ்ஜனேயஸ்வாமி இவர்களின் பதினான்காவது வருஷோற்சவம் 10—7—32 உயன்று கொண்டாடப்பட்டதென்றும் காலையில் வேத பாராயணம் அபிஷேகம் அர்ச்சனை பஜனை வீதியைச்சுற்றிவருதல் முதலிய உற்சவங்களும் மத்யான்ஹம் விசேஷமான ப்ராம்மண சந்தர் பணமும் மாலையில் ஹரிபஜனை மங்களாரத்தி முதலியவைகள் நடத் தப்பட்டதென்றும் ஆண்டாங்கோயில் சின்னதாராபுரம் முதலான இடங் களிலிருந்து பலர் விஜயம் செய்திருந்தனரென்றும் ஸ்ரீமான் ஆண்டாங் கோயில் K. நாராயணாசாரியார் அறிவிக்கிறார்.

காங்கயம் மத்வஜன சங்கத்தின் ப்ரஸிடெண்டு ஸ்ரீமான் ரங்கநாத ராயர் தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டதால் ஸ்ரீனிவாசா சாரியாரை நியமனம் செய்யப்பட்டிருப்பதாகவும் காரியதரிசி கோய முத்தூருக்கு மாற்றப்பட்டிருப்பதால் அந்தஸ்தானம் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லையென்றும் 4, 5 உகளில் ஓடப்பள்ளி ஸ்ரீஸ்வாமிகளு க்கு மாத்வமகாஜனங்களால் விசேஷமாய் பிக்ஷை நடத்தப்பட்டு அவர்கள் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்திற்கு தாராபுரம் பிரயாணமானாரென்றும் காங் கயத்திருந்து நமது நிருபர் அறிவிக்கிறார்.



கரூரைச்சேர்ந்த ஆண்டாங்கோயில் கிராமத்திலுள்ள ஸ்ரீகோபால கிருஷ்ணஸ்வாமிக்கு நஞ்சை புகளூர் கிராமத்தில் எட்டு ஏக்கர் நில மிருந்தும் சுமார் 4 மாதகாலமாய் கோயிற் பூஜை இல்லாமல் கதவு சாத்தப்பட்டிருக்கிறதை அவ்வூர் மகாஜனங்கள் கவனிக்கவேண்டுமென்று ஓர் நிருபர் வற்புறுத்துகிறார்.

இப்பத்திராதிபரால் தமிழில் எழுதப்பட்ட ஸ்ரீகீதாதத்வத்தின் 3-வது பாகமாகிய ஜீவேசுவர பேதம்தான் 'என்னும் ஸஞ்சிகை வெளி யாகி அதன் சந்தாதாரர்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாய் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

### ‡ சங்கர லீலா விலாஸம்.

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்பு ராவ் M A. அவர்கள் எழுதுவதாவது:—

ஸாம்பபஞ்சன சபேடிகா என்ற ஓர் நூலை யாரோ என் கையில் என் முகத்தில் அறைந்தாப்போல் விட்டெறிந்தார். இப் படிப்பட்ட நூல் வெளியில் பிரசாரமடைவதால் உலகில் என்ன தீங்கு ஏற்படுமென்பதை வெளியில் காட்ட சில தத்வங்களை எடுத்துக்காட்ட முன்வந்தேன்.

சமீபத்தில் நடந்த ஐரோப்பிய யுத்தத்தில் ஜெர்மானி யர்கள் பலமான பீரங்கி குண்டுகளையும், வெடிகுண்டுகளையும் உபயோகித்ததுபோல் தத்வ விஷயமாய் இப்போது நடக்கும் வாக்யுத்தத்தில் ஸாம்பசாஸ்திரிகள் உச்சத்வனியுடன் வாசாம கோசரமாய் விஷ்ணுவைஷ்ணவ தூஷணைகளை ஏராளமாய்ச்செய் திருக்கிறார். கும்பகர்ணன் யுத்தத்திற்கு வந்தபொழுது தன் சைனியம் இன்னது சத்ரு சைனியம் இன்னது என்று விவேக மில்லாமல் எதிரில் தோன்றிய யாவரையுமே விழுங்கிவந்தான்.

‡ ஸாம்பகளஹஸ்திகை என்ற இந்த வியாஸத்தில் மத்வாவ தார அத்புதலீலாரகசியம் என்ற போலகம் சாஸ்திரியாரின் ஆக்ஷேபணைகளுக்கு அநேகமாய் எல்லாவற்றிற்கும் தெளிவாய் பதில் இருக்கிறதுமன்றி அத்வைதத்தின்மீதுள்ள அநேக ஆக்ஷே பணைகள் தவளிவாய் எழுதப்பட்டிருக்கிறபடியால் இதற்கு சங்காலீலாவிலாஸமென்று பெயரிடப்பட்டிருக்கிறது. ப—ர்.]

அதுபோலவே சாம்பசாஸ்திரிகளும் தம்முடைய சாஸ்திரம் இன்னது பிறருடைய சாஸ்திரம் இன்னதென்று பகுத்தறியாமல் துவைதிகள் சொன்னதை எல்லாமே கண்டிக்கவேண்டுமென்ற நிச்சயத்துடன் வெளிவந்திருக்கிறார். மாத்வர்களின் மீது அவர் செய்துள்ள ஆக்ஷேபணைகளாவன;— 1 மத்வாசாரியாரும் மாத்வர்களும் தைத்யதானவர்கள். 2 ஸாம்பபஞ்ஜனமென்ற நூல் ச்வானத்தின் உச்சிஷ்டம்போல் தொடத்தகாதது. 3 ஸுதாகாரராளான ஸ்ரீஜயதீர்த்தர், ருத்திராதிதேவர்களால் ஸ்ரீமத்வாசாரியார் வணங்கப்பட்டவரென்று சொன்னது அஸம்பத்தம். 5 மாத்வர்கள் வாக்யார்த்த ஸம்பிரதாயத்தை அறியார்கள். சரியான பண்டிதர்களுடன் சமரஸமாய் வாக்யார்த்தம் செய்ய பின் தயங்குவார்கள். ஓர் மாத்வன் ஓர் சாஸ்திரியை வாக்யார்த்தகாலத்தில் அறைய எல்லோரும் சிறித்தார்கள். 5. இப்படித்தான் யோசமாக உத்திராதிமடம் ஸ்வாமிகள் பாலகங்காதரதிலகருடன் வாதமாடினார். (தொடரும்.)

## ஸ்ரீபகவத்கீதை த்வைதபரம்தான்.

(ஸ்ரீஉத்தராதிமடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசாரியாராகிய ஸ்ரீஸத்யத்யானதீர்த்த ஸ்ரீபாதாள்.)

நாம் அதிகம் எடுத்துச்சொல்லவேண்டியதில்லை. கீதாசாஸ்திரம் எப்படி ப்ரவிருத்தித்ததென்பதை யோசித்தாலே ஸ்ரீகிருஷ்ணர் அத்வைதத்தைப்பற்றி மனதில் சிறிதும் எண்ணியிருக்கமாட்டாரென்று நிச்சயமாகிறது. பந்துக்களிடமுள்ள ஸ்நேகத்தாலும் குரு முதலானவர்களைக்கொல்வதால் உண்டாகும் பாபத்தின் சம்சயத்தாலும் கோரமான கர்மமாகிய யுத்தத்தை செய்யமாட்டேனென்று சொல்லி பேசாமல் உட்கார்ந்துவிட்ட அர்ஜுனனைப்பார்த்து, ஸ்ரீகிருஷ்ணர் அவருடைய தத்வம் அத்வைதமாயிருக்கும்பக்ஷத்தில் இவ்வாறு சொல்லியிருப்பார், "ஹே அர்ஜுனா! நீ ஸாக்ஷாத் பரப்ரம்மமாகவே இருக்கிறாய். உன் சரீரம் பொய். உன் காண்டீவம் பொய். உன் பாணங்கள் பொய். உன் எதிரில் காணப்படும் இந்த சைனியங்களின் சரீராதிகளும் பொய். இந்த பயங்கரமான படாடோபமெல்லாமே கிளிஞ்சல் வெள்ளியைப்போல் அத்யந்தம் பொய். மேலும் நாங்கள் செய்யும் யுத்தம் பொய், எங்கள் பயம் பொய். எங்களுக்கு கிடைக்கப்போகும்



ராஜ்யாதி பலன்கள் பொய் அல்லது ஸ்வர்க்காதி பலன்கள் பொய், நீ ஏன் வீணாய் நடுங்குகிறாய்" இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணன் உபதேசித்திருந்தால் நாடகத்தில் விதூஷகனின் வார்த்தையைப்போன்ற மேற்கண்ட வார்த்தை விநோதகரமாக் இருக்குமேயன்றி கோரமான யுத்தகர்மாவில் ப்ரவிருத்திக்க அர்ஜுனனை உத்தேஜனம் செய்யக்கூடியதாயாகாது. இவ்வாறு பொய் யுத்தத்தில் பொய் ஆட்களை பொய் தனுர்பாணங்களால் பொய் ஸம்ஹாரம்செய்து பொய் கிருஷ்ணனின் பொய் ப்ரஸாதத்தால் பொய் ராஜ்யத்தின் ப்ராப்தியை எந்த புத்திசாலிதான் விரும்புவான்? மேலும் உலகமெல்லாம் பொய் என்று அறிந்துகொண்ட எந்த ப்ராக்ஞன் அதிபயங்கரமான கோர யுத்தத்தில் ப்ரயத்னபூர்வமாய் ஈடுபடுவான்? இப்பேர்ப்பட்ட அத்வைத தத்வம் உபதேசம் செய்யும் குரு சும்மாயிருப்பதே சரி. அந்த குருவுக்கு மௌனமே உசிதம். இதை சிரவணம் செய்த சிஷ்யனும் பட்ட மரம்போல் அசைவற்று எந்தகாரியத்திலும் ப்ரவிர்த்திக்காமலிருப்பதுதான் சரி. சிஷ்யன் மூன்று தடவை உண்மையான அத்வைததத்வத்தை உபதேசம் செய்ய கேட்டதற்கு சங்கராசாரியார் மௌனமாகவேயிருந்தார். புத்தரும் சிஷ்யர்களின் ப்ரச்னத்திற்கு அப்படியே மௌனமாக இருந்தார்; இவ்வாறு மௌனம் ஸாதித்தது அத்வைதமதாசாரியாரான சங்கராசாரியாருக்கு முற்றிலும் பொருந்தும். அத்வைததத்வத்தை சிரவணம் செய்த (ஆகவே ஞானமார்க்கத்தை அவலம்பித்த) சிஷ்யனுக்கும் சங்கரபாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி எல்லா கர்மாக்களையும் பரித்யாகம் செய்வதும் உசிதமே. கர்மங்களினின்றும் நிவிருத்தி அத்வைதத்திற்கு அலங்காரம். ஸ்ரீகிருஷ்ணனோ "உத்திஷ்ட பரந்தப; தஸ்மாத்யுத்யஸ்வபாரத; ததோயுத்தாயயுஜ்யஸவ யுத்யஸ்வவிகதஜ்வர:; உத்திஷ்ட பாரத" என்று அடுத்தடுத்து யுத்தம்செய் யுத்தய்செய் என்று விதித்திருக்கிறார். கையில் சவுக்கை பிடித்துக்கொண்ட பார்த்தஸாரதியான ஸ்ரீகிருஷ்ணன் உபதேசம் செய்ததத்வம் யுத்தாதிஸ்வகர்மாக்களுக்கு உத்தேஜகமேயல்லாது உற்சாகத்தை கெடுக்கக்கூடியதல்ல.

(தொடரும்.)

---

## ஓர் அபிநந்தனம்.

ஸ்ரீமத் ஆனந்ததீர்த்த பகவத்பாதாளியற்றிய தசப்ரகரணத்தையும் அதன் டீகாடிப்பணிகளையும் மேநாட்டு வேதாந்த விசார ரீதிப்படி ஆங்கிலத்தில் விஷயவிசாரம் செய்து மத்வமதம்தான் எல்லோராலும் ஏற்றுக்கொள்ள தகுந்ததென்று ஸ்தாபித்து அநேக நூறுபக்கங்களைக்கொண்ட ஓர் நூலை இயற்றி சுமார் 200 பக்கங்களைக்கொண்ட அதன் முடிவுரையை மதராஸ யுனிவர்ஸிடிக்கு அனுப்பிவைத்த இந்நகர் ஸ்ரீ

மவே ்காபே ராமச்சந்திராசாரியாரின் புத்திரரும் எமது நண்பரு மான ஸ்ரீமான் R. நாகருஜசந்மா M.A., அவர்களுக்கு, அவர் அனுப்பி வைத்த நூலை அமேரிக்காதேசத்து பல மேநாட்டு கல்விமான்கள் வெகு வாய் மெச்சி கொண்டாடியதால் மதருஸ் யுனிவர்ஸிடியார் டாக்டர் ஆப் பிலாஸபி (Doctor of Philosoply) என்ற அறியதொரு பட்டத்தை அளித்திருப்பதை அறிய மிகவும் சந்தோஷப்படுகிறோம். இத்தகைய பட்டம் இதுவரை எமது சமுகத்தார் யாருக்கும் கிடைத்ததில்லை. தவிறவும் உலகப்ரஸித்தரான ஸ்ரீமான் டாக்டர் S. ராதாகிருஷ்ணன் அத்வைதத்தை சிலாகித்து பல இடங்களில் மத்வமதத்தை தூஷித்திருப் பதால் அதற்கு அவருடைய ரீதிப்படி சரியானபடி கண்டனம் எழுதி மேநாட்டார் எமது மத்வமதத்தை நன்கறிய ஸாதனத்தை தயார் செய்து கொடுத்த டாக்டர் நாகருஜசர்மா செய்த மத்வமத சேவைக்கு மாத்வர்கள் நன்றி பாராட்டுவார்களென்று நம்புகிறோம்.

---

## விசேஷதினங்கள்.

| | | |
|---|---|---|
| 23–8–32 | செவ்வாய்கிழமை | கோகுலாஷ்டமி எல்லோருக்கும் உபவாஸம். |
| 24–8–32 | புதன்கிழமை | வியாஸராஜமடத்தாருக்குமட்டில் காலையில் பாரணை, மற்ற எல்லோருக்கும் இரவு மணி 10–38க்குமேல் பாரணை. |
| 27–8–32 | சனிவாரம் | ஏகாதசி. |
| 28–8–32 | பானுவாரம் | த்வாதசி, ஹரிவாஸரம் மணி 8–50க்கு மேல் பாரணை. |
| 31–8–32 | புதவாரம் | அமாவாசை, விஷ்ணுபஞ்சக உப. |
| 3–9–32 | சனிவாரம் | ஸாமவேத உபாகர்மம், |
| 4–9–32 | பானுவாரம் | விக்னேசுவர சதுர்த்தி. |
| 5–9–32 | சோமவாரம் | ரிஷிபஞ்சமி. |
| 10–9–32 | சனிவாரம் | தசமி இரவு மணி 8-57க்கு பிறகு போஜனம் கூடாது. |
| 11–9–32 | பானுவாரம் | ஏகாதசி. |
| 12–9–32 | சோமவாரம் | சிரவண உபவாஸமில்லை. |
| 13–9–32 | மங்களவாரம் | அநந்த சதுர்தசி, |
| 14–9–32 | புதவாரம் | பௌர்ணமி, யஜுர்வேத உபாகர்மம், விஷ்ணுபஞ்சக உபவாசம். சந்திரகிரஹணம் இரவு மணி 12-51 ஸ்பரிசம் மோக்ஷம் மணி 4-11 பகல் 3 மணிக்குள் போஜனம் செய்யவேண்டியது. பூர்வாபாத்ர நக்ஷத்ரம் கும்பராசியில் பிறந்தவர்களுக்கு சாந்திசெய்துகொள்ள வேண்டும். |

தமிழ்நாடு ஆவணக் காப்பக
208696